
# பாரதி

10. 11. 74.

புதிய கட்டிடத்
திறப்பு விழாச்
சிறப்பு மலர்



மயிலிட்டி வடக்கு
அமெரிக்க மிசன் பாடசாலை
காங்கேசன்துறை

1974

# பாரதி

## சிறப்பு மலர்



மயிலிட்டி வடக்கு அமெரிக்க மிசன் பாடசாலை

காங்கேசன்துறை

1974 - 10 - 23

இதழாசிரியர்
திரு. நா. கருணைநந்தசிவம்
திரு. இ. செல்லத்துரை

குகன் அச்சகம், தெல்லிப்பழை

# நுழைவாயிலில்......

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் உணர்விக்கும் எம்மன்னையாகிய கலைவாணிக்குப் *பாரதி* என்றும் பெயருண்டு. சரசுவதியின் அருள் பெற்ற பேரறிஞர்களுக்குப் *பாரதி* என்னும் விருது வழங்கப்படுகின்றது. பாரதியின் கடைக்கண் நோக்கம் பெறவேண்டி வரும் மாணவரின் கலாநிலையமாக விளங்கும் எமது பாடசாலையின் வெளியீட்டிற்குப் *பாரதி* என்று பெயர்சூட்டியுள்ளோம். பாரதி ஆண்டுதோறும் இதழ் விரித்து மணம் பரப்புவாள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து

என்றியம்பிச் சென்றான் வான்புகழ் வள்ளுவன். பைந்தமிழ்ப் பாவலன் பாரதியும் அறங்கள் யாவற்றையும் எடுத்தியம்பி "......அன்னயாவினும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்" என்கிறான். ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைய கல்வியை, அறங்கள் யாவற்றிலும் சிறந்த எழுத்தறிவிக்கும் பணியை இற்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டிலே அடியெடுத்துவைத்த ஐரோப்பியர்கள் சிறப்புற ஆற்றினர். ஏகாதிபத்திய உணர்வு அவர்களிடம் இருந்தபோதிலுங்கூட எம் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிய அரும் பணியை நாம் இலகுவில் மறந்துவிடமுடியாது. அவர்கள் விட்டுச்சென்ற பல கல்வி நிலையங்கள் அவர்களது நிறைவான பணியின் நினைவுச்சின்னங்களாக நிலைபெற்றுள்ளன. அழிவுறா அந்த நினைவுச்சின்னங்கள் பலவற்றுள் ஒன்றே மயிலிட்டியிலுள்ள எமது கல்வி நிலையம்.

ஏறத்தாழ முந்நூறாண்டுகால வரலாற்றுப் பின்னணியுடன், ஐரோப்பிய வரலாற்று ஆசிரியரின் நூலிலே சிறப்பிடம் வகிக்கும் எமது பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினால் அமைக்கப்பட்ட புதிய கட்டிடம், எங்கள் அதிபர் தலைமையில் பாடசாலை பெற்று வரும் படிப்படியான வளர்ச்சியின் ஓர் மைல்கல் என்று கூறலாம். இப் பாடசாலையின் முதிர்ந்த வரலாற்றையும், கிராமியச் சூழலில் இன்று அது பெற்றிருக்கும் வளர்ச்சியையும், பெருமைமிகு பெற்றோர் தம் அயரா முயற்சியையும் கோடிட்டுக் காட்டும் வகையிலே எங்கள் பாடசாலையென்ற எழில்மலர்க் காவிலே இந்த நறுமலர் அரும்பாகி, போதாகி, மலராகி உங்கள் கரங்களிலே தவழ்ந்து மணம் கமழ்ந்து நிற்கிறது.

நற்றமிழறிஞர்தம் நனியினிய படைப்புக்கள் இவ்வழகு மலருக்கு நறுமணத்தை ஊட்டுகின்றன. தங்கள் படைப்புக்களைத் தந்துதவிய நல்லறிஞர்க்கு எம் நன்றிதனைக் காணிக்கையாக்குகிறோம். வாழ்த்துரைகள் வழங்கிய வடமாநிலக் கல்வித் திணைக்களப் பிரதம கல்வி அதிகாரி திரு. என். ஆர். பாலசிங்கம் அவர்களுக்கும், காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அலுவலர் திரு. சி. தியாகராசா அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றி உரியது. பெருகிவரும் பொருளாதார நெருக்கடியின் மத்தியிலே, பெரிய கல்லூரிகள்கூடத் தம் சஞ்சிகைகளை வெளியிடத் தயங்கிநிற்கும் இவ் வேளையிலே எமது பாடசாலை இச் சிறப்பு மலரை வெளியிடுவது பலருக்கு வியப்பைத் தரலாம். ஆயின், துணிவுடன் அருஞ்செயல்கள் பலவற்றை ஆற்றும் ஆற்றலாளர்களான மயிலிட்டிவாழ் மாண்புடைப் பெற்றோரும் எங்கள் ஆசிரியர்களும் கட்டிடம் அமையக் காரணமாயிருந்ததோடன்றி இந்த மலரும் மலர்ந்து மணம்பரப்பத் துணையானார்கள். மாரியும் பொய்த்துவிடும். ஆயின் வாரிவழங்கும் மயிலிட்டி மக்களின் கரங்கள் பொய்ப்பதில்லையே! அவர்கள் ஆதரவுக்கு எம் அகமார்ந்த நன்றி. விளம்பரங்கள் அளித்து ஆதரவு நல்கிய வர்த்தகப் பெருமக்களும் எம் நன்றிக்குரியவரே. இதழ் விரிந்து இச் சிறப்பு மலர் சிரித்திடத் துணைநின்ற மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்களுக்கு எம் நன்றி என்றென்றுமுண்டு.

தித்திக்கும் தீந்தமிழ்க் காவுள் நுழைந்து நற்றமிழ்த் தேன்பிலிற்றும் நறுமலரின் மணமதனை நுகர்ந்திடத் துடிக்கும் நும்மை இனியும் நுழைவாயிலில் தடுத்துவைக்க நாம் விரும்பவில்லை. உள்ளே நுழைமின்! தமிழ்மணத்தை நுகர்மின்!

— இதழாசிரியர்

# பொருளடக்கம்


நுழைவாயிலில் iii

பிரதம கல்வி அதிகாரியின் வாழ்த்துரை v

வட்டாரக் கல்வி அலுவலரின் வாழ்த்துரை vi

அதிபரின் அறிக்கை vii

சிந்தனை மலர்கள்

- கற்கை நன்று 1
- குரு சிஷ்யக் கல்விமுறை 6
- சமயக் கல்வியின் எதிர்காலம் 9
- அமெரிக்க மிசனரிகளின் கல்வித் தொண்டு 12
- வரலாற்றுப் பின்னணியில் மயிலிட்டி 17

மாணவர் மன்ற அறிக்கைகள் 23

புதிய கட்டிட அன்பளிப்புகள் 30

வரவு செலவுத் தொகுப்பு 32

அன்பளிப்பு வழங்கியோர் 33

வடமாநிலக் கல்வித் திணைக்களப்
பிரதம கல்வி அதிகாரி

# திரு. என். ஆர். பாலசிங்கம் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

மயிலிட்டி வடக்கு அமெரிக்க மிசன் பாடசாலை பழம் பெருமை வாய்ந்தது. பிலிப்பஸ் போல்டேயஸ் என்பவரால் **1672ஆம்** ஆண்டு ஒல்லாந்து நாட்டில் வெளியிடப்பட்ட சரித்திர நூல் இதனை உறுதிசெய்கிறது. பழம் பெருமையும் சிறப்பும் வாய்ந்த இக் கல்வி நிலையம் பல்வேறு காரணங்களால் பின் தங்கிய நிலையிற் காணப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக இப் பாடசாலை வளர்முக நோக்கிற் செல்லத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இக் கல்வி நிலையம் கல்வியில் உயர்ந்தோங்கி நாட்டிற்குத் தேவையான நல்ல சிற்பிகளை உருவாக்குமென்ற நம்பிக்கை எமக்குண்டு. ஆற்றல் வாய்ந்த அதிபரும் ஆசிரியரும் ஆர்வமுள்ள பெற்றோரும் இந் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளனர். இந் நிறுவனம் பல வளங்களும் மலிந்து வாழவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**என். ஆர். பாலசிங்கம்**

*கல்வித் திணைக்களம்*
*யாழ்ப்பாணம்*
*1974-10-18*

காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அலுவலர்

திரு. சி. தியாகராசா அவர்களின்

# வாழ்த்துரை

மயிலிட்டி வடக்கு அமெரிக்க மிசன் பாடசாலையினர், பெற்றோர் - ஆசிரியர் சங்கம் அமைத்த புதிய கட்டிடத் திறப்பு விழாவையொட்டி **பாரதி** என்னும் பெயரில் சிறப்பு மலரொன்றை வெளியிட முன்வந்துள்ளது போற்றுதற்குரிய முயற்சியாகும். மாணவர்கள் கல்விபற்றிய சரியான கருத்துணர்வைப் பெற வழிவகுக்கும் பல கட்டுரைகளை இம் மலர் கொண்டிருப்பது பாராட்டிற்குரியது.


இப் பாடசாலை அண்மைக்காலத்தில் பெற்றுவரும் துரித மான வளர்ச்சி நம்பிக்கையூட்டக்கூடியதாயுள்ளது. இப் பாட சாலையின் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தினர் தமது பாடசாலையின் வளர்ச்சியிற் காட்டிவரும் ஆர்வம் ஏனைய பாடசாலைகளுக்கும் முன்மாதிரியாக அமையக்கூடியது. பெற்றோரின் ஆர்வத்தைத் திரட்டி, நெறிப்படுத்திப் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பயன் படுத்தும் செயலாண்மைமிக்க அதிபரும் பாடசாலை வளர்ச்சியே குறிக்கோளாகக் கொண்ட ஆசிரியர்களும் பாராட்டிற்குரியவர் களே. அவர்களின் உழைப்பால் பாடசாலை மேலும் சிறப்புறும் என நம்புகின்றேன்.

இப் பாடசாலை சகல நலன்களும் பெற்றுயர வாழ்த்து கின்றேன்.

சி. தியாகராசா


வட்டாரக் கல்வி அலுவலர் பணிமனை
யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை
1974-10-15

# எங்கள் அதிபர்



திரு. சி. அப்புத்துரை அவர்கள்

# ஆசிரியர்கள்



*நிற்போர் : (இ. வ.)* திருவாளர்கள் நா. கருணைநந்தசிவம், த. இராசரத்தினம்,
ஞா. செபப்பிரகாசம், சு. சின்னத்தம்பி, சி. சிவகுமார்.

*இருப்போர் : (இ. வ.)* திருவாளர்கள் இ. செல்லத்துரை, வை. இரத்தினம், ந. நந்தகோபன்,
சி. அப்புத்துரை (அதிபர்), திருவாட்டிகள் அ. தம்பையா,
பி. அன்ரனிசாமி, யோ. இராசரத்தினம்.

திரு. தி இரத்தினம், திருவாட்டி சி. சின்னையா *(படத்தில் இல்லை)*

# அதிபரின் அறிக்கை

மதிப்பிற்குரிய முதன்மை விருந்தினர் அவர்களே,
காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி அவர்களே,
கொடையாற் சிறந்த திரு. க. வி. துரைசாமி அவர்களே,
பண்டிதர் வ. நடராசன் அவர்களே,
மேடையில் வீற்றிருக்கும் பெரியோர்களே,
பெருந்திரளாக வருகைதந்துள்ள பெற்றோர்களே,
பழைய மாணவர்களே,
அன்பர்களே,
குழந்தைகளே,
வணக்கம்.

எமது பாடசாலைப் புதிய கட்டிடத் திறப்பு விழாவுக்கும் பெற்றோர் தின விழாவுக்கும் பெருந்திரளாக வந்திருக்கும் உங்கள் அனைவரையும் களிபேருவகையுடன் வரவேற்கின்றோம். எமது பாடசாலையின் வளர்ச்சியில் நீங்கள் காட்டிவரும் ஆர்வம் எம்மை மகிழ்விக்கிறது. உங்கள் ஆர்வத்தின் சின்னமாகப் புதிய கட்டிடம் அமைந்துள்ளது. பாடசாலை வளர்ச்சிக்குத் தங்கள் அன்பும் ஆதரவும் எமக்குத் தொடர்ந்து கிடைக்கும் என நம்புகிறோம்.

இங்கு எமது முதன்மை விருந்தினராக வருகை தந்துள்ளவர் வடமாநிலக் கல்வி ஆலோசகர் **திரு. ச. இராசா** அவர்கள். அவர்கள் யாழ். மாவட்டத்தின் வடபகுதியிலுள்ள பாடசாலைகளுக்குப் பொறுப்பானவராக விளங்குகிறார்கள். ஐயா, ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலே கல்வித்துறை வளர்ச்சிக்குத் தாங்கள் ஆற்றிய பெரும்பணியை அனைவரும் அறிவர். இப்போது தாங்கள் இப் பகுதிக்கு வந்துள்ளது எமது கல்வி வளர்ச்சிக்குப் பெருமளவில் துணையாகும் என நம்புகிறோம். காட்சிக்கெளியராய், அன்போடு ஆசிரியர்களையும் அதிபர்களையும் வரவேற்றுப் பேசும் பண்பினராய், பாடசாலைகளின் தேவைகளைக் கேட்டறிந்து நிறைவுசெய்யும் மாண்பினராய் விளங்கும் தங்களை அன்புடன் வரவேற்கின்றோம். பல் திறப்பட்ட பணிகளுக்கு மத்தியிலே இங்கு வருகை தந்தமைக்காக எமது நன்றிகளை உரிமையாக்குகிறோம்.

கொடைமடம் பட்டுப் புகழ்பரப்பி நிற்கும் வள்ளல் **திரு. க. வி. துரைசாமி** அவர்கள் இங்கு வருகைதந்து எமது பாடசாலைக் கொடியைப் பட்டொளி வீசிப் பறக்கவிட்டார்கள். அவர்களது கொடையின் புகழ் பரவுவதுபோல எமது பாடசாலையின் புகழும் பரவிப் பலருக்கும் பயன்

விளக்கும் என நம்புகிறோம். புதிய கட்டிடத்திற்கு அவர்கள் ஏழாயிரத்து எண்ணூற்றெழுபத்தைந்து ரூபா வழங்கியுள்ளார்கள். இதுபோல இப் பகுதியிலுள்ள பல பாடசாலைகளும் அவர்களாற் பெரும் பயன்பெற்றுள்ளன. திரு. துரைசாமி அவர்களை மனமுவந்து வரவேற்கின்றோம்; நன்றி கூறுகிறோம். அவர் பல்லாண்டுகள் வாழவேண்டும்; இப் பகுதி மக்களுக்குத் தொண்டாற்றவேண்டும் என இறைவனை இறைஞ்சுகிறோம்.

எமது வட்டாரக் கல்வி அதிகாரி **திரு. சி. தியாகராசா** அவர்கள் எம்முள் ஒருவராகத் திகழ்பவர். எமது பாடசாலை வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றும் பணி பெரிது. அவர்களை மகிழ்வுடன் வரவேற்கின்றோம். நன்றி கூறுகின்றோம்.

தமிழின் பல்வேறு துறைகளையும் நுண்மாண் நுழைபுலத்துடன் கற்றுத் துறைபோய பண்டிதர் **வ. நடராசன்** அவர்கள் புதிய கட்டிடத் திறப்புவிழா மலரை வெளியிட வந்துள்ளார்கள். அவர்களையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் அவர்களும் மயிலிட்டி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களும் இங்கு வருகைதந்துள்ளனர். அவர்களையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்; அவர்களுக்கும் எமது நன்றி உரியது.

**வரலாறு:**

"தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் — இவள்
என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம்
எங்கள் தாய்............"

என்று தமிழன்னையின் பழமையைப் போற்றினர் மகாகவி பாரதியார். அதேபோல எமது வித்தியாலயத்தின் வரலாற்றை—அது நிறுவப்பட்ட காலத்தை — அறுதியிட்டுக் கூறமுடியாதவர்களாக இருக்கின்றனர் வரலாற்றாசிரியர்கள்.

1672ஆம் ஆண்டு இடச்சு மொழியில் **பிலிப்பசு போல்டேயசு** என்பவரால் எழுதி வெளியிடப்பட்ட நூலொன்றில் இதேயிடத்தில் அமைந்திருந்த பாடசாலை பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. **இங்கு 750 மாணவர்களைக் கொண்ட புகழ்பூத்த பாடசாலையொன்று இருந்தது** என்பதே அக் குறிப்பு. ஆகவே இடச்சுக்காரரின் வருகைக்கு (1658) முன்பே இங்கு ஒரு பாடசாலை இருந்திருக்கவேண்டும். போல்டேயசு கூறும் செய்திகளும் அவர் தமது நூலில் வெளியிட்டுள்ள படமும் அவர் கூறும் பாடசாலையே இப் பாடசாலை என்பதைத் தெளிவாக்குகின்றன. ஒல்லாந்தரால் பரிபாலிக்கப்பட்ட இப் பாடசாலை பின்னர் ஆங்கிலேயர் காலத்திலும் சிறந்த கல்விப்பணி புரிந்துவந்துள்ளது.

1816ஆம் ஆண்டு அமெரிக்க மிசனரிகள் இலங்கைக்கு வந்து கல்வித் தொண்டைச் சமயத் தொண்டுடன் இணைத்து வளர்க்க ஆரம்பித்தனர். அவர்கள் இக் கல்வி நிலையத்தைப் பொறுப்பேற்று, 1961இல் அரசாங்கம் தனியார் பாடசாலைகளைப் பொறுப்பேற்கும்வரை தொடர்ந்து நடாத்தினர். இதன்மூலம் அவர்கள் இப் பகுதி மக்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பணி மகத்தானது. இவ்வேளையில் அவர்களுக்கு நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**புதிய கல்வித்திட்டம்:**

எல்லோரும் சமம் என்ற உண்மையை உறுதிப்படுத்தும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்படும் புதிய கல்வித்திட்டத்தை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். கல்வித்துறையினரால் மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் நடாத்தப்பெற்ற கனிட்ட வித்தியாலயங்கள் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளன. இவற்றில் பயின்ற மாணவர்கள் கல்லூரி மாணவர்களைப்போன்ற கல்வி வாய்ப்புக்களைப் பெறமுடியாதிருந்தனர். விஞ்ஞானம், கணிதம், தொழில்முறைப் பாடங்கள் போன்றவற்றைப் பயிற்ற, பயிற்றப்பட்ட விசேட ஆசிரியர்கள் கல்லூரிகளுக்கு மட்டுமே நியமிக்கப்பட்டனர். இன்று அந்த நிலை மாறிவருகிறது. கனிட்ட வித்தியாலயங்களுக்கு விசேட ஆசிரியர்களை நியமிக்கும் நடைமுறை விரைவுபடுத்தப்படவேண்டும். இரு பாடசாலைகளுக்கு ஓராசிரியர் என்ற முறை புதிய கல்வித்திட்டம் நடைமுறைக்கு வந்த மூன்றுவது ஆண்டிலும் நடைமுறையிலிருப்பது பொருத்தமற்றது. விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைபெற்ற ஆசிரியர்களைப் பாடத்திற்கு ஒருவர் என்ற வகையில் நியமிப்பது புதிய கல்வித்திட்டத்தின் வெற்றிக்கும் கனிட்ட பாடசாலை மாணவர்களின் உயர்ச்சிக்கும் இன்றியமையாததாகும். சங்கீதம், நடனம், சித்திரம், வணிகம், தொழில் முன்னிலைப் பாடங்கள் முதலியவற்றுக்கான ஆசிரியர்கள் பகுதிநேர அடிப்படையிலாவது நியமிக்கப்படவேண்டும்.

பாடசாலைக் கல்வியின் பயன் இறுதித் தேர்வில் சித்தியடைதல் என்ற நிலை புதிய கல்வித்திட்டத்தால் மாற்றம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. பாடசாலைக் கல்வி முடிவடைந்த மாணவன் தொழிற்பயிற்சி ஒன்றில் நாட்டங்கொண்டவனாக வெளியேறும் நிலை இதனால் உருவாக்கப்படுகின்றது. இதற்காகத் தொழில் முன்னிலைப் பாடங்களுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் சீரியமுறையிற் செயற்படுத்தப்பட்டால் எமது பொருளாதாரப் பிரச்சனைகள் தீரவும், மக்களின் வாழ்கைத்தரமுயரவும், நாடு தொழில்மயமாகவும் வாய்ப்பு ஏற்படும்.

இச் சந்தர்ப்பத்திற் பெற்றோருக்கு ஒன்று கூறக் கடமைப்பட்டுள்ளோம். புதிய கல்வித்திட்டத்தில் பத்துப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்

றன. இவை யாவும் சமனான முக்கியத்துவமுள்ளன. இதனையுணர்ந்து உங்கள் பிள்ளைகளுடைய கல்வியை நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உண்டு.

**யாழ்ப்பாண வளாகம்:**

யாழ்ப்பாண மக்களின் நெடுங்காலக் கனவாக இருந்த ''யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்'' புதிய உயர்கல்விச் சட்டத்திற்கமைவாக **இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாக**மாக உதயமாகியுள்ளது. இவ் வளாகம் எமது மாணவர்க்குச் சிறந்த பணியாற்றவேண்டுமென விழைகிறோம். பொறியியலாளர், மருத்துவர்கள், கலைப்பட்டதாரிகள், விஞ்ஞானப் பட்டதாரிகள் என்ற மரபுவழிப் பரம்பரையினரை உருவாக்குவதோடு, புதிய அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடக்கூடிய தொழில்நுட்ப வல்லுநர்களையும் உருவாக்குகின்ற பணியில் யாழ்ப்பாண வளாகமும் ஏனைய வளாகங்களும் முன்னிற்கவேண்டும்.

**மாணவர் தொகை:**

எமது வித்தியாலயத்தில் 1972இல் 12 ஆசிரியர்களும் 355 மாணவரும் இருந்தனர். 1973இல் 14 ஆசிரியர்களும் 396 மாணவரும் இருந்தனர். இவ்வாண்டில் 13 ஆசிரியர்களும் 424 மாணவரும் உள்ளனர்.

ஆறும் தரம் முதல் ஒன்பதாம் தரம் வரை உள்ள வகுப்புக்களிற் பயிலும் மாணவர்கள் பாடசாலை மாறுவது பெரும்பாலும் தடைசெய்யப்பட்டுவிட்டதாலும் பாடசாலையின் கல்வித்தரம் வளர்ச்சிபெற்று வருவதாலும் மாணவர் தொகை அதிகரித்துவருகின்றது. இக் காரணங்களால் இடநெருக்கடியும் தளபாடப் பற்றுக்குறையும் ஏற்பட்டது. புதிய கட்டிடம் இடநெருக்கடியைத் தீர்த்துவிட்டது. கல்வித் திணைக்களம் விரைவில் தளபாட வசதியை ஏற்படுத்தித் தருமென எதிர்பார்க்கின்றோம்.

**ஆசிரியர்கள்:**

இங்கு 13 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கின்றார்கள். இத் தொகை எமது மாணவர் தொகைக்கேற்றதாக அமையாது குறைவாகவே உள்ளது. எனினும் ஆசிரியர் அனைவரும் தமது வசதியீனங்களைப் பொருட்படுத்தாது மாணவரின் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்துவருகிறார்கள். அவர்களின் மனமுவந்த ஒத்துழைப்பே பாடசாலையின் உயர்ச்சிக்குக் காரணமாகும்.

இவ்வாண்டு ஓகஸ்ற் மாதம் எமது கணித - விஞ்ஞானப் பகுதிநேர ஆசிரியராகப் பணியாற்றிய திரு. ந. நந்தகோபன் அவர்கள் வேறு

பாடசாலைக்கு முழுநேர ஆசிரியராக நியமிக்கப்பட்டதால் எம்மை விட்டுப் பிரிந்துசென்ருர். மிகச் சிறப்புடனும் பொறுப்புணர்ச்சியுடனும் மாணவர்கள் விரும்பும் வகையிலும் கல்விபயிற்றிய அவர்கள் சேவையை நாம் பாராட்டுகிருேம். சேவையே குறிக்கோளாகக் கொண்ட இளைஞராகிய அவர் நலம்பெற்ருேங்க வாழ்த்துகிருேம்.

வித்தியாலயப் பணிகள் பலவற்றிலும் ஆர்வத்தோடு உழைத்த ஆசிரியர் திரு. த. இரத்தினம் அவர்கள் காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அலுவலரின் செயலாளராக நியமிக்கப்பட்டதால் எம்மைவிட்டுச் சென்ருர். அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் அவர் மீண்டும் இங்கே வருவதன்மூலம் எமது ஆசிரியர் பற்ருக்குறையின் ஒரு பகுதி தீருமென நம்புகிருேம்.

யாம் இப் பாடசாலையிற் கடமையாற்றத் தொடங்கிய காலத்தில் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களைப்பற்றியும் இங்கு குறித்துச்செல்வது பொருத்தமாகும். விவசாய பாடத்தில் சிறப்புப் பயிற்சிபெற்ற பயிற்றப் பட்ட ஆசிரியராய திரு. சோ. கந்தசாமி அவர்கள் தமது சொந்த ஊருக்கு இடமாற்றம்பெற்றுச் சென்ருர். இவர் விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பாயிருந்தகாலத்தில் எமது பாடசாலை வட்டார விளையாட்டுப் போட்டியில் முதன்மைபெற்றதோடு பல வெற்றிக்கிண்ணங்களையும் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. செல்வி வி. செல்வநாயகம் அவர்கள் இங்கு சில வாரங்களே பயிற்றுவித்தபோதிலும் சிறந்த ஆங்கில ஆசிரியராக விளங்கினுர். இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. இ. சின்னையா அவர்களும் சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்தார். இவர் சமயத்துறையில் மாணவரை வழிநடத்தினுர். சமய விழாக்கள், கூட்டுப்பிரார்த்தனைகள் முதலியவற்றுக்கு இவர் பொறுப்பாக இருந்தார்.

சிரேட்ட உதவியாசிரியராயிருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த திரு. கு. கந்தையா அவர்களும் தமது சொந்த ஊர்ப் பாடசாலைக்கு மாற்றம்பெற்றுச் சென்ருர். இல்ல விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பித்து நடாத்துவதற்கு இவர் பெரிதும் உதவினுர். சேரன் இல்லம் இன்று விளையாட்டுத்துறையில் முன்னணியில் விளங்குவதற்கு இவரது தலைமையில் மாணவர் பெற்ற பயிற்சியே காரணமாகும்.

பெற்ருேர் - ஆசிரியர் சங்கத்தின் முதலாவது செயலாளராகத் திறம்படக் கடமையாற்றிய திரு. க. துரைசிங்கம் அவர்கள் இடமாற்றம் பெற்ருர்கள். இவர் சிறந்தமுறையில் விஞ்ஞானத்தையும் கணிதத்தையும் போதித்து மாணவரின் போற்றுதலைப் பெற்ருர். இடமாற்றம் பெற்றுச் சென்ற இவர்கள் தமது புதிய பாடசாலைகளின் வளர்ச்சிக்கு உழைத்து தமது வாழ்வில் உயர்வுபெற இறைவன் அருள்கிடைக்க வேண்டுகிருேம்.

திரு. சி. சிவகுமாரன் அவர்கள் கணித - விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்ற வந்துள்ளார். அவர்களை நாம் அகமகிழ்ந்து வரவேற்கிறோம்.

**கல்விச் சுற்றுலாக்கள் :**

தொழில் முன்னிலைப் பாடங்கள், சமூகவியல், விஞ்ஞானம் முதலியவற்றிற் பயிலும் விடயங்களுடன் தொடர்பான இடங்களை நேரிற் பார்வையிடவும் பொது அறிவை வளர்க்கவும் கல்விச் சுற்றுலாக்கள் காலத்திற்குக்காலம் ஒழுங்கு செய்யப்படுகின்றன. மாணவர்கள் சீமெந்துத் தொழிற்சாலை, கண்ணாடித் தொழிற்சாலை, வாளித் தொழிற்சாலை, அலுமினியம் தொழிற்சாலை, மட்பாண்டத் தொழில்நிலையம், சவர்க்காரத் தொழிற்சாலை, கந்தரோடை புதைபொருள் ஆய்வு நிலையம், தொல்பொருட்சாலை, பொதுநூலகம், சங்கிலியன் தோப்பு முதலிய பல இடங்களையும் பார்வையிட்டனர். சூழலில் நிகழும் தொழில்கள் தொடர்பான அறிவை நேரிற் பார்வையிட்டுப் பெறும் நோக்குடன் மாணவர்கள் மயிலிட்டிக் கரையோரப் பகுதியைப் பார்வையிட்டனர்.

**விளையாட்டுத்துறை:**

எமது மாணவரின் உடலுறுதியை வளர்க்கும் நோக்குடன் முறையான உடற்பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்துறையில் மாணவரின் திறமையை வளர்க்கும் நோக்குடன் மெய்வல்லுநர் சுவட்டுமைதானப் போட்டிகள் நடாத்தப்பெற்றன. வட்டாரக் கல்வி அலுவலர் திரு. சி. தியாகராசா அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

விளையாட்டுப் போட்டி இல்ல அடிப்படையில் நடாத்தப்பட்டது. சேரன் இல்லம் முதலாம் இடத்தையும், பாண்டியன் இல்லம் இரண்டாம் இடத்தையும், சோழன் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன.

பின்வருவோர் இல்ல ஆசிரியர்களாகப் பணியாற்றினர் :

| | |
|---|---|
| சேரன் : | திரு. த. இராசரத்தினம் (பொறுப்பாசிரியர்)<br>திரு. இ. சின்னையா (இடமாற்றம் பெற்றார்)<br>திருமதி அ. தம்பையா. |
| சோழன் : | திரு. ஞா. செபப்பிரகாசம் (பொறுப்பாசிரியர்)<br>திரு. இ. செல்லத்துரை<br>திருமதி யோ. இராசரத்தினம் |
| பாண்டியன் : | திரு. வை. இரத்தினம் (பொறுப்பாசிரியர்)<br>திரு. சு. சின்னத்தம்பி<br>திருமதி பி. அன்ரனிசாமி |

விளையாட்டுப் போட்டியைத் திறம்பட நடாத்த உதவிய இல்ல ஆசிரியர்களுக்கும் போட்டி நிர்வாகச் செயலாளராக இருந்த திரு. தி.

இரத்தினம் அவர்களுக்கும் உதவியாளர்களாகக் கடமையாற்றிய திரு. நா. கருணானந்தசிவம், திரு. ந. நந்தகோபன் ஆகியோர்க்கும் எமது பாராட்டுக்கள்.

**தேர்வுப் பெறுபேறுகள் :**

எமது மாணவர்களில் மூவர் ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் தேர் வின் முதலாம் பகுதியில் சித்தி பெற்று இரண்டாம் பகுதித் தேர்வுக் குத் தோற்றியுள்ளனர்.

விவேகானந்த சபையினர் நடாத்தும் சமயபாடத் தேர்வுக்குத்தோற் றிய 160 மாணவர்களில் 106 பேர் சித்தியடைந்தனர். இவர்களில் 21 பேர் அதிவிசேட சித்திபெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**சமயக் கல்வி :**

சமயக்கல்வி பாடத்திட்டத்தில் கட்டாய பாடமாக்கப்பட்டுள் ளது. இது மகிழ்ச்சிக்குரியது. அறிமுறைக் கல்வியோடு சமயச் சாதனை களிலும் மாணவர் ஈடுபடுவதற்குப் பிரார்த்தனை மூலமும், சமய விழாக் கள் மூலமும் வாய்ப்பளிக்கப்படுகிறது. நவராத்திரி விழா, நால்வர் குரு பூசைகள் முதலியன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. சைவ மாணவர் மன்றம் இவற்றுக்கான ஒழுங்குகளைக் கவனித்துவருகிறது.

**தமிழ்த்தின விழா :**

மொழியறிவை விருத்தியாக்கும் நோக்குடன் கல்வித் திணைக்களம் நடாத்திய தமிழ்த்தினப் போட்டிகளும் விழாவும் கடந்த ஆண்டு வழமைபோல நடாத்தப்பெற்றன.

**மாணவர் மன்றங்கள் :**

மாணவர்களின் பல்துறையறிவை வளர்க்கும் நோக்குடனும் தலைமை தாங்கும் பண்பை உருவாக்கும் நோக்குடனும் பல மன்றங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

மாணவர் தமிழ் மன்றம் பாரதியார், வள்ளுவர் முதலிய பெரு மக்களின் நினைவு நாட்களை நடாத்துவதுடன் மாதமொருமுறை கூடி மாணவரின் சொற்பயிற்சி மன்றமாகவும் பணியாற்றி வருகிறது.

நாடகம், நடனம், இவை முதலிய கலைகளில் மாணவர்க்குப் பயிற்சி யளித்துவருகிறது கலா மன்றம். இம் மன்றம் நாளை (1974-10-24) அதன் வருடாந்தக் கலை விழாவைச் சிறப்புடன் நடாத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.

சைவ மாணவர் மன்றம் பாடசாலை ஆலயத்தை நன்கு பரிபாலித்து வருவதுடன் கூட்டுப் பிரார்த்தனையையும் ஒழுங்குற நடாத்துகிறது.

அயற் கோயில்களில் உற்சவ காலங்களிலும், சாதாரண காலங்களிலும் இம் மன்ற உறுப்பினர் தொண்டாற்றி வருகின்றனர்.

சமூகக் கல்வி மன்றம், பனந்தொழில் விருத்தி மன்றம், விவசாயக் கழகம், உடை அமைத்தற் கழகம் என்பனவும் தம்துறை அறிவைப் பரப்புவதில் ஈடுபட்டுவருகின்றன.

**பழைய மாணவர் சங்கம்:**

பாடசாலையில் ஆர்வமுள்ள பல பழைய மாணவர்கள் பாடசாலை வளர்ச்சிக்குத் தீவிரமாக உதவி வருகின்றனர், இவர்களைப் 'பழைய மாணவர் சங்கம்' என்ற அமைப்பின்கீழ் ஒன்று திரட்டுவது பாடசாலை வளர்ச்சிக்கு மேலும் உதவுவதற்கும். பழைய மாணவர் சங்கம் அமைப் பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான உதவிகளைச் செய்யுமாறு பழைய மாணவர்களை அன்புடன் அழைக்கின் ரும்.

**பெற்ருேர் ஆசிரியர் சங்கம்:**

ஒரு பாடசாலையின் பெருநிதி, திறம்பட இயங்கும் பெற்ருேர்-ஆசிரியர் சங்கமாகும். இத்தகைய ஒரு சங்கத்தை எமது பாடசாலை பெற்றுள்ளது என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிருேம். இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடி காரணமாக அரசாங் கம் பாடசாலைகளுக்குப் பூரணமாக உதவமுடியாதுள்ளது. இந் நிலையில் பெற்ருேர் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு ஆவன செய்வது இன்றியமையாததாகும். எமது பெற்ருேர் - ஆசிரியர் சங்கம் இதனை உணர்ந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும். கம்பீரமாக எழுந்து நிற்கும் இப் புதிய கட்டிடமே பெற்ருேர் - ஆசிரியர் சங்கப் பணியின் சிறப்புக்குச் சான்ருக நிற்கிறது.

> நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்
> நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்
> அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்.

என்ற பாரதி ஆணைப்படி, எமது பெற்ருேரிற் சிலர் பெருநிதி வழங் கினர்; பலர் காசுகள் தந்தனர்; வேறுசிலர் உடலுழைப்பு நல்கினர். இவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் நினைத்துப் பெருமைப்படக் கூடியதாக இச் செயல் அமைந்துள்ளது. வித்தியாலயமும் அவர்கள் பெருமைப்படும் வகையில் வளரும் என நாம் உறுதிகூற விரும்புகிருேம்.

நூறுவீதம் சைவப் பிள்ளைகள் பயிலும் இப் பாடசாலையின் பெயர் அமெரிக்க மிசன் பாடசாலை என இருப்பது பெற்ருேரின் உள்ளத்தைப் புண்படுத்துகிறது. இதனை மாற்றுவது தொடர்பாகக் கல்வித் திணைக் களத்தின் உதவியை நாடுகிருேம்.

**தேவைகள் :**

இதுபோன்ற பாடசாலைகளின் தேவைகள் பலவாகும். எனினும் சில உடனடித் தேவைகளையாவது வழங்க ஏற்பாடு செய்யுமாறு எமது மதிப்பிற்குரிய முதன்மை விருந்தினர் அவர்களை வேண்டுகிறோம். ஆங்கில பாடத்தைப் பயிற்றுவதற்குப் பயிற்றப்பட்ட ஆசிரியர் எவரும இங்கு இல்லை. ஓராசிரியரை நியமிப்பது மிக அவசியமாகும்.

6, 7, 8, 9ஆம் தரங்களில் ஒரே ஆசிரியர் விஞ்ஞான, கணித பாடங்களை அடுத்த ஆண்டிற் கற்பிக்கவேண்டிய நிலை ஏற்படும். இதனால் சில வகுப்புக்களில் இப்பாடங்களை கற்பிக்க முடியாத நிலை ஏற்படும். எனவே 1975ஆம் ஆண்டு ஆரம்பத்தில் கணித-விஞ்ஞான ஆசிரியர் ஒருவரை மேலதிகமாகநியமிக்குமாறு வேண்டுகிறோம். தளபாடப் பற்றாக்குறை, மல சல கூட வசதியில்லாமை, போதிய விவசாய உபகரணங்களில்லாமை என்பவற்றையும் குறுகிய காலத்தில் கல்வித் திணைக்களம் தீர்த்துவைக்குமென நம்புகிறோம்.

**நன்றி :**

எமது பாடசாலையின் வளர்ச்சியில் வடமாநிலக் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் அலுவலாளர்களும் அதிக அக்கறை காட்டி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். கல்விப் பணிப்பாளர் அவர்கள் வருகை தர வேண்டுமென்ற ஆர்வத்தினராயிருந்தார்கள். திரு. ச. இராசா அவர்கள் இன்று அவர்களது சார்பில் முதன்மை விருந்தினராக வருகைதந்துள்ளார்கள். கல்வித் திணைக்களத்தினர்க்கு, சிறப்பாக எமது முதன்மை விருந்தினர் திரு. ச. இராசா அவர்களுக்கு எமது நன்றி உரியது. எமது பாடசாலை வளர்ச்சியோடு நேரடித் தொடர்புடைய எங்கள் வட்டாரக் கல்வி அலுவலர் திரு. சி. தியாகராசா அவர்களுக்கும் நாம் நன்றிகூறும் கடப்பாடுடையோம்.

பணத்திற்கும் நல்ல குணத்திற்கும் பெரும்பாலும் தொடர்பு இருப்பதில்லை. இதற்கு விதிவிலக்காக பணமும் குணமும் நிறைந்து சான்றாண்மை என்ற இலக்கணத்திற்கு, வாழும் இலக்கியமாகத் திகழ்பவர் கொடைவள்ளல் க. வி. துரைசாமி அவர்கள். வித்தியாலயக் கொடியை ஏற்றிவைத்த அவர்களுக்கு எமது நன்றி. புதிய கட்டிடத்துக்கு வரையாது வழங்கியவர் என்ற வகையிலும் அவர்கள் எமது நன்றிக்கு உரியவராவர்.

பாடநூற்றுறையிலும் தமிழிலக்கியத்துறையிலும் ஒப்புயர்வற்று விளங்கும் பண்டிதர் வ. நடராசன் அவர்கள் மலரை வெளியிட்டு உரையாற்றவுள்ளார். யான் இன்று இம் மேடையில் ஏறிநிற்கும் பேறு பெற்றிருக்கின்றேன் என்றால் அதற்குப் பண்டிதர் அவர்கள் ஆசிரியராக்

இருந்து எமக்கு ஊட்டிய கல்வி அறிவும் ஏற்படுத்திய கல்வி ஆர்வமுமே காரணமாகும் என்பது எனது பணிவான எண்ணமாகும். ஆசிரியர்க் கெல்லாம் ஆசிரியராக விளங்கும் அவர்களுக்கு எமது உளங்கனிந்த நன்றிகள்.

காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கம் அவர்களும், மயிலிட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. பூ. பொன்னம் பலம் அவர்களும், காங்கேசன்துறைப் பட்டினசபை உறுப்பினர் திரு. ஞா. பேரின்பம் அவர்களும் வாழ்த்துரை வழங்கவுள்ளனர். அவர்களுக்கு எமது நன்றி.

செயற்குழுவினர் சார்பில் இன்று மூவர் உரையாற்றவுள்ளனர். திரு. வி. இரத்தினராசா அவர்கள் பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தின் சார்பில் பாடசாலையின் பெயர்மாற்றம் பற்றிய சங்கத் தீர்மானத்தை முன்மொழிய உள்ளார். திரு. வே. சின்னத்துரை, திரு. வே. மாணிக்கன் ஆகியோர் மேற்படி தீர்மானத்தை வழிமொழிந்துரைக்கவுள்ளனர். அவர்கள் மூவருக்கும் எமது நன்றி.

புதிய கட்டிடம் அமைக்கவேண்டும் என்ற எண்ணம் பெற்றோர் - ஆசிரியர் சங்கச் செயற்குழுவில் உதயமானது. செயற்குழு உறுப்பினர் அனைவரும் இப் பணியில் அயராது உழைத்தனர். 1972ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்ட இச் செயற்குழுவே கட்டிடம் முடியும்வரை தொடர்ந்துபணியாற்றவேண்டுமெனப் பொதுச்சபை இருமுறை தீர்மா னித்தமையே இச் செயற்குழுவின் உயர்திறமைக்குச் சான்றாகும். செயற் குழு உறுப்பினரின் சேவை வரலாற்றுப் பெருமைவாய்ந்தது. அவர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரியது.

பொருளைத் திரட்டி அதனைப் பெரும்பணி ஒன்றுக்குப் பயன்படுத்தும் பணி எளிதன்று. மிகக் கடினமான இப் பணியைச் சிறப்புறச் செய்து முடித்தவர் எமது பெற்றோர் - ஆசிரியர் சங்கப் பொருளாளர் திரு. சி. துரைராசா அவர்கள். அவர்கள் தமது நேர்மையின் மூலம் அனைவரது பாராட்டுக்கும் உரியவரானார். தொடங்கிய பணி நின்றுவிடக்கூடாது என்பதற்காகத் தமது உழைப்புக்குரிய மூலதனத்தையே கட்டிடவேலைக்கு முற்பணமாக வழங்கியவர்; தமது சொந்த வேலைகளை ஒதுக்கிவைத்து விட்டுக் கட்டிட வேலைக்காக ஓயாது உழைத்தவர் திரு. துரைராசா அவர்கள். அவர்களுக்கு எமது நன்றி உரியது.

பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் சிந்தனைகளுக்குச் செயலுருவம் தந்து நிறைவேற்ற முன்னிற்பவர் எமது பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாள ரான ஆசிரியர் திரு. நா. கருணானந்தசிவம் அவர்கள். அவர்களுக்கும் எமது நன்றி.

கிராம சமுதாயத்தின் உயர்வுக்கு ஒன்றிணைந்த மக்கள் சக்தியும் அதன் ஆற்றல்வாய்ந்த உழைப்புமே ஆதாரமாகும். பெருந்தொகைப் பணத்தைத் திரட்டி ஒரு கட்டிடத்தை அமைப்பதைவிட கிராம மக்கள் சிரமதானமூலம் அதனைச் செய்வது அவர்களுக்கு மனத்திருப்தியையும் கட்டிடத்தின்மீதும் அதில் அமைந்துள்ள நிறுவனத்தின்மீதும் அளப்பரிய உரிமைப்பாட்டையும் ஏற்படுத்தும். கட்டிடத்துறை வல்லார் புதிய கட்டிடத்தின் பெறுமதி ஏறத்தாழ 30,000 ரூபா என மதிப்பிட்டுள்ளனர். ஆனால், இதனை நாம் ஏறத்தாழ 19,000 ரூபாவில் முடித்துவைத்திருக்கிறோம் என்றால் எமது பெற்றோர் - ஆசிரிய சங்க உறுப்பினர்கள் சிரமதானம்மூலம் வழங்கிய உழைப்பே அதற்குக் காரணமாகும்.

திரு. சி. இளையதம்பி குழுவினர்
,, மு. நாகமணி ,,
,, மு. செல்லையா ,,
பாரதி சனசமூக நிலையத்தினர்
கண்ணகி படிப்பகத்தினர்
வள்ளுவர் அறிவகத்தினர்
திருப்பூர் இளைஞர்
திரு. வ. இராசையா குடும்பத்தினர்

ஆகியோர் குழுக்களாகவும்,

திரு. வே. சின்னத்துரை
,, வே. மாணிக்கன்
,, ப. இரத்தினம்
,, நா. சபாரத்தினம்
,, க. தம்பிப்பிள்ளை
,, இ. கதிரவேலு
,, க. பாலசுந்தரம்
,, சி. விஜயரத்தினம்
,, க. நவரத்தினம்
,, சி. கருணகடாட்சகுரு

ஆகியோர் தனியாகவும் தமது உழைப்பை நல்கினர். இவர்களனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றி.

எமது ஆசிரியர்கள் பாடசாலையின் சிறப்புக்கு அயராது உழைத்து வருகின்றனர். அவர்களுக்கு எமது நன்றி.


மீண்டும் ஒருமுறை அனைவருக்கும் நன்றிகூறி அமைகிறேன்.

வணக்கம்.

மயிலிட்டி வடக்கு அ. மி. பாடசாலை
காங்கேசன்துறை
1974 - 10 - 23

**சி. அப்புத்துரை**

## பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயற்குழு
## (1972 — 1974)




இருப்போர் : (இ. வ.) திருவாளர்கள் து. துரைஐயா, ப. இரத்தினம், நா. கருணைந்தசிவம் (செயலாளர்), சி. அப்புத்துரை (தலைவர்), சி. துரைராசா (பொருளாளர்), சு. பொன்னுத்துரை, திருவாட்டி அ. தம்பையா.

நிற்போர் : (இ. வ.) திருவாளர்கள் க. சண்முகநாதன், சி. பாஸ்கரசாமி, வே. மாணிக்கம், வே. சின்னத்துரை, சி. செல்லையா, வி. இரத்தினராசா.

பொ. சற்குணநாதன், வ. நவரத்தினம் (படத்தில் இல்லை)

பெற்ரேர் ஆசிரியர் சங்கம் அமைத்த



புதிய கட்டிடம்

# கற்கை நன்று

பண்டிதர் இ. நமசிவாயம்

மனவுணர்ச்சியுள்ளவர்கள் மக்கள் எனப்படுவர். மக்கட் பிறப்பினுள் மனவுணர்ச்சி இல்லாதாரைத் தொல்காப்பியர் மாக்கள் என வேறுபடுத்தி ''மாவும் மாக்களும் ஐயறிவினமே'' என விலங்குகளோடு சேர்த்துக் கூறுவர். மனவுணர்ச்சியுள்ளாரை வேறுபடுத்தி ''மக்கள் தாமே ஆறறிவுயிரே'' என உயர்த்துக் கூறுவர். உயிர்களைப் பொறிபற்றி வகுத்த பவணந்தியார், பொறி ஐந்தல்ல தில்லாமையால் மக்களையும் ஐந்தறிவுயிர் என விலங்கு, புட்களோடு சேர்த்துக் கூறினராயினும் திணை வகுக்குமிடத்து,

> "மக்கள், தேவர், நரகர் உயர்திணை
> மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை"

என அவர்களை விலங்கு, புட்களிலிருந்து வேறுபடுத்தி உயர்த்துக் கூறுவர். கம்பர்,

> "தக்க இன்ன தகாதன இன்னவென்
> றொக்க உன்னல ராயின் உயர்ந்துள
> மக்களும் விலங்கே"

என மக்களை உயர்ந்தவராகக் கூறுகின்றவர், அவருள் மனவுணர்ச்சியில்லாதாரை விலங்கென இழித்துக் கூறுவர். இக் கூற்றுக்களால் மனவுணர்ச்சியுள்ள மக்கள் உயிர் வர்க்கங்களுட் சிறந்தவர் என்பது வெளியாகின்றது.

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனுர் மனவுணர்ச்சியுள்ள மக்களுள்ளும் கற்றவரைக் கல்லாதவரினும் வேறுபடுத்தி உயர்த்துக் கூறுவர்.

> "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
> கற்றுரோ டேனை யவர்"

என்பது அவர் அருமைத் திருவாக்கு. பரிமேலழகர், 'சிறப்புடை மகற்காயிற் கற்றல் வேண்டும்' என்பர். இவற்ருல் கற்றவரே உயிர் வர்க்கங்களுள் அதி சிறந்தவரென்பது புலனுகின்றது. இதனேடு கல்வியை மக்கள் பேணிக் கற்றல் வேண்டும் என்பதும் தெளிவாகின்றது. கல்வியின் சிறப்புக் கூறவந்த நாயனுர், விதிமுகத்தால் ஓரதிகாரத்துக் கூற அது முற்றுப்பெருமையின் 'கல்லாமை' என மற்றுமோர் அதிகாரங் கொண்டு எதிர்மறைமுகத்தாற் கூறியதும் இங்கு நோக்கத்தக்கது.

இங்ஙனம் சிறந்த கல்விபற்றிக் கூறுமிடத்து நாயனுர் முதற்குறளில், கற்க; கசடறக் கற்க; கற்பவை கற்க; கற்றபின் அதற்குத்தக நிற்க என்கின்ருர்.

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

என்பது குறள். முத்தியடைதற்குரிமையுடைய மகன் கற்கக்கடவன். குற்றமறக் கற்கக்கடவன். கற்பதற்குரிய நூல்களைக் கற்கக்கடவன். கற்றபின் அக் கல்விக்குத் தகுதியாக அந்நூல்கள் சொல்லுகின்ற வழியில் நிற்கக்கடவன் என்பது அதன் பொருள்.

முத்தியடைதற்கு உரிமையுடையது மக்கட் பிறப்பாதலின் அப்பிறப்புற்ற ஒவ்வொருவனும், அம்முத்திக்குக் காரணமான கல்வியைக் கற்றல் இன்றியமையாதது. கல்வி முத்திப்பேற்றுக்கு நேர்க் காரணமன்ருயினும், பரம்பரைக் காரணமென்பது அறிஞர் கொள்கை.

''கற்பக் கழிமடம் அஃகும் மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணரும் கோளுணர்ந்தால்
தத்துவ மாய நெறிப்படரும் அந்நெறி
இப்பா லுலகத் திசைநிறீஇ அப்பால்
உயர்ந்த உலகம் புகும்.''

''எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்— மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொரு ளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்''

என்ற வாக்குக்களால் கல்வி முத்திப் பேற்றுக்குப் பரம்பரைக் காரணமென்பது பெறப்படும்.

கற்குங்கால் கசடறக் கற்றல் வேண்டும். ''கசடறக் கற்றலாவது:- விபரீத ஐயங்களை நீக்கி மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும் பலகாலும் பயிறல்'' என்பர் பரிமேலழகர். விபரீதமாவது:- ஒன்றனை மற்ருென்ருக மாறுபடக் கொள்ளல்; கயிற்றை இருளிற் பாம்பெனக் கொள்வதுபோல. ஐயமாவது:- ஒன்றனை அதுவோ மற்ருென்ருே எனத் துணியமாட்டாது நிற்றல். இப்பியைக் கண்டு இது இப்பியோ வெள்ளியோ எனத் துணியமாட்டாது நிற்றல்போல. இவ் விபரீத ஐயங்கள் நீங்கினுற்ருன் மெய்ப்பொருள் தோன்றும். அம்மெய்ப்பொருளையும் நல்லோர் பலருடனும் சேர்ந்து பழகுதல் வேண்டும். அதுவும் பலகாலும் பழகுதல் வேண்டும். ''வைத்ததொரு கல்வி மனப் பழக்கம்'' என்பது இங்கு நினைக்கத்தக்கது.

மக்கள் சிறிய அறிவினையே யுடையர். அவர்களின் வாழ்நாளும் சிலவே. அச் சில வாழ்நாளிலும் அவர்கள் கொள்ளும் பிணிகளோ பல. ஆதலால் அவர்களுக்கு எல்லா நூல்களையும் கற்றல் ஆகாது. பாலும் நீரும் கலந்திருந்தால் அன்னம் அதனுள் நீரை நீக்கிப் பாலையே பருகுதல்போல மக்களும் உலக நூல்களை நீக்கி அறிவு நூல்களையே கற்றல் வேண்டும். 'அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற் பயனே' என்பது இலக்கணகாரர் கொள்கையாதலின், புருடார்த்தங்கள் என்று சிறப்பிக்கப்படுகின்ற அந் நான்கனையும் உணர்த்தும் நூல்களையே கற்றல் வேண்டும். களவுநூல், காம நூல் முதலாய பிறநூல்களைக் கற்றலாகாது.

''அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது
உலகநூல் ஓதுவ தெல்லாம்—கலகல
கூஉந்துணை யல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவார் இல்''

என்கின்றது நாலடியார்.

நூல்களை ஐயந்திரிபறக் கற்ற வழியும் பயனின்று. அந்நூல்கள் ஓதுகின்ற வழியில் ஒழுகுதலும் வேண்டும். கல்வியின் நேர்ப்பயன் ஒழுக்கம். இல்லறத்தில் நிற்போர் அறம், பொருள்களுக்குக் காரணமான முயற்சிகளையும் உடன்பட்டுச் செய்து, அவ்வறம், பொருள்களாலுண்டாகும் இன்பத்தினையும் அநுபவித்துத் தானம் முதலாய அறங்

களைக் கல்வி, அறிவு, ஒழுக்கங்களால் தகுதியுடையாராய் இருப்பவர்களுக்கே செய்தலில் வழுவாது ஒழுகல் வேண்டும். துறவறத்தில் நிற்போர் தவத்தான் மெய்யுணர்ந்து அவாவறுத்தலில் வழுவாது ஒழுகல் வேண்டும்.

அவ்வறம் முதலிய நான்கனையும் உணர்த்தும் நூல்களைக் கற்றற்குக் கருவியாகிய சில நூல்களும் உள. அவை அவ்வறமுதல் நான்கனையும் காணுதற்குக் கருவியாதலால் கண் என்று சிறப்பித்துக் கூறப்படும். ஆதலால் அக் கருவிநூல்களை ஒருவன் முன்னுறக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'',
''எண் எழுத்து இகழேல்'',
''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு''

என்பர் பொய்யில் புலவர்களாய ஔவையாரும், திருவள்ளுவநாயனாரும். அவ்விரண்டனுள் எண் என்பது கணிதம் என்பர் பரிமேலழகர். சிலர் தருக்கம் என்பர். இன்னும் சிலர் தருக்கம் கணிதத்தின் ஓர் உறுப்பாயடங்குதலின் எண் என்பது அவ்விரண்டனையும் உணர்த்தும் என்பர். இங்ஙனம் அடக்கிக் கூறலே பரிமேலழகர் கருத்தும் என்பர். எழுத்து என்பது இயற்றமிழ். ''எழுத்து என்றது இயற்றமிழை. அது ''எண் என்ப ஏனை எழுத்தென்ப'' என்பதனாலும் உணர்க. 'இசைத் தமிழும் நாடகத் தமிழும் இவ்வியற்றமிழ்போல முதல்நூற் பொருள் உணர்தற்குக் கருவியன்மையின் இயற்றமிழ் ஒன்றுமே கூறினார்' என்பர், சங்கரநமச்சிவாயப் புலவர். திராவிடமாபாடியங்கண்ட மாதவச் சிவஞானசுவாமிகளும் அதனை ஒப்புவர். ''எழுத்தெனவே அதனோடொற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று'' என்பர் பரிமேலழகர். இவ்வாற்றால் கணிதம், தருக்கம், எழுத்து, சொல் எனப்படும் நான்கும் கண்ணெனச் சிறப்பித்துக் கூறப்படுதலால் அந்நான்கும் கற்றற்கு இன்றியமையாதன என்பது தெளியப்படுகின்றது.

இவ்வாறு கூறப்பட்ட கருவி நூல்களையும் பொருள் நூல்களையும் கற்றவர் ஓரிடத்து ஒருகாலத்திருந்துகொண்டே எல்லாவிடத்துப் பொருள்களையும் எக்காலத்துப் பொருள்களையும் அப்பொருள்களினின்ற மெய்ப்பொருளையும் காணும் ஞானக்கண்ணுடைமையால் கண்ணுடையர் என்று சிறப்பிக்கப்படுவர். அக் கல்வியில்லாது ஊனக்கண் மாத்திரமேயுடையார், ஓரிடத்து ஒருகாலத்துப் பொருள்களையே காணுதலன்றி ஏனை இடத்துப் பொருள்களையும் ஏனைக் காலத்துப் பொருள்களையும் காணமாட்டாமையானும், அக் கண்டபொருள்களில் தானும் நின்ற மெய்ப்பொருளைக் காணமாட்டாமையானும் கண்ணுடையரென்று சொல்லப்பெறார். நோய் முதலியவற்றால் துன்பஞ் செய்யும் ஊனக்கண், புண் என்று உணரப்படுதலின் புண்ணுடையர் என்று இழித்துக் கூறப்படுவர். கற்றவர் நல்லொழுக்கத்தினைத் தாம் கைக்கொண்டொழுகுவர் ஆதலானும், பிறர்க்கு நன்மை பயக்கும் உறுதிப் பொருள்களைக் கூறுவர் ஆதலானும், அந் நல்லொழுக்கத்

தினைக் கண்டும், அவர் கூறிய உறுதியாய கூற்றுக்கள் நிகழ்கால எதிர் காலங்களில் தமக்கு இன்பம் பயத்தல் கண்டும் அப் பிறரெல்லாம் அவரிடத்து அன்புடையர் ஆவர். அன்றியும்,

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே"

"கடைநிலத்தோ ராயினுங் கற்றுணர்ந்
தோரைத், தலைநிலத்து வைக்கப் படும்"

என்றபடி அக் கற்றவர் குலம் முதலியவற்றின் இழிவு நோக்காது யாவராலும் மேலாக மதிக்கப்படுவர். இவ்வாற்றானும் பிறவாற்றானும் கற்றவர் இம்மையில் பயனுறுவர். ஒருவன் செய்த வினைகளின் காரியங்களாகிய தருமமும் அதருமமும் அவன் உயிரிடத்துக் கிடந்து மறுபிறவிகளினும் சென்று பயன் தருதல்போல், ஒருவன் கற்ற கல்வியும் அவன் உயிரிடத்துப் பொருந்தி மறுபிறவிகளினும் சென்று நன்னெறிக் கண்ணே செலுத்தும் என ஆன்றோர் கூறலின், கற்றவர் மறுபிறப்புக்களிலும் இம்மைக் கல்வியால் பயன் பெறுவர் என்பது அறியப்படுகின்றது.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்பது குறள். கல்வி வீடுபேறளித்தல் முன்னே காட்டப்பட்டது. ஆதலின் இம்மை, மறுமை, வீடு என்னும் மும்மையும் தரும் சிறப்புடையது கல்வி என்பது அறியப்படுகின்றது. அதனால் அது கேடில் விழுச்செல்வம் என்று புகழப்படுகின்றது.

இங்ஙனம் சிறந்த கல்வியை ஒருவன் இளமையிலிருந்தே வருத்தப்பட்டும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

"தொடங்குங்கால் துன்பமாய் இன்பம்
பயக்கும்
மடங்கொன்று அறிவகற்றும் கல்வி",

"வருந்தித் தாங் கற்றன ஓம்பாது"

என்ற அறிஞர் கூற்றுக்களால், கல்வி ஆரம்பகாலத்தில் துன்பம் தரும் என்பதும், பின் இன்பம் தரும் என்பதும் தெரியப்படுதலின், ஆரம்ப துன்பத்தை நோக்கி அதனைக் கைவிடாது பின்வரும் பயன் நோக்கி அதனைப் போற்றிக்கொள்ளலே தக்கதாகும்.

கல்வி கற்போருக்கமையவேண்டிய இயல்புகள் பல சொல்லப்படினும் அவற்றுள் இன்றியமையாதது, ஆசிரியன் உள்ளத்து அருள்வர நடத்தலாகும். ஆசிரியனை வழிபட்டு நடத்தலினால் அவ்வாசிரியனின் அருளைப் பெறும் மாணாக்கன் கல்விப் பயனைப் பெறுதல் நிச்சயம்.

"பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்கின்றது புறநானூறு. பிற்றை நிலை என்பதற்கு வழிபாட்டு நிலை என உரை காண்பர் அறிஞர். செல்வரின் முன்னே அவரிடம் பொருள் பெற விரும்பும் வறிஞர் அவ்வாசையால் தாழ்ந்து நிற்றல் போல, ஆசிரியர் முன்னே அவரிடம் கல்வி கற்க விரும்பும் மாணாக்கர் அக்கல்வி பெறும் ஆசையால் தாழ்ந்து நிற்றல் வேண்டும் என்கின்றார் வள்ளுவப் பெருந்தகை.

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும்
கற்றார்
கடையரே கல்லா தவர்"

என்பது அவர் வாக்கு.

"பொய்யான மானம் நோக்கி மெய்யான கல்வி இழந்தார் பின் னொருஞான்றும் அறிவுடையராகா மையின் 'கடையரே' என்றார்" என விளக்குவர் பரிமேலழகர். தன்னை மேலாக மதித்து ஆசிரியரை வழி படலில் வெட்கங்கொண்டு கல் வியை இழந்தவர் பின் எக்காலத் தும் அறிவுடையராக முடியாமை யின் மாணுக்கர் ஆசிரியரை வழி படலில் வெறுப்புக்கொள்ளாது அவரை வழிபட்டு உய்தி பெறுவார்க ளாக.

திருவள்ளுவநாயனுர் கூறிய சில குறள்களையும் அவற்றுக்குப் பரிமே லழகர் உரைத்த உரைகளையும் ஆதாரமாகக் கொண்டு சுருக்கமாக இக் கட்டுரை எழுதப்பட்டது. விரி வாக அறிய விரும்பும் மாணுக்கர் திருக்குறளில் கல்வி, கல்லாமை என் னும் அதிகாரங்களை ஆராய்வோடு கற்றுத் தெளிந்துகொள்வார்களாக.

## முத்தமிழ்

அவைக்களத்துச் செல்லுதற்குரிய வரம்பினமைந்த ஆங்கில மொழியினை வேந்தன் மொழி என அம்மொழிப் புலவர் விதந்து கூறுவர். அப்பரிசே யாமும் அவைக்களத்திற் செல்லுதற்குரிய வரம்பினமைந்த தமிழினைப் பாண்டியன்றமிழ் என்போம். 'எது தமிழ்?' என வினவுவா ருக்குப் 'பாண்டியன்றமிழே தமிழ்' என்பது விடையாகும். அதுவே நிலைபேறுடையது. அறிஞர் போற்றற்குரியது. பொருள் வருவாயொன் றினையே கருதி மனம்போனவாறு மரபு தவறியெழுதும் மொழிவழக் கானது மழைக் காலத்திலே தோன்றி அக்காலங் கழிய மறைந்து போகின்ற சிறு பூடுகளைப்போல நிலைபேறில்லாதது. நிலைபேறுடைய உண்மை, அழகு, செம்மை என்னும் இவை தம்மையே அறிஞரது உள்ளம் என்றும் அவாவிநிற்கும். முத்தமிழுள் இயற்றமிழானது உண்மையினையும் இசைத்தமிழானது அழகினையும் நாடகத் தமிழானது செம்மையினையும் சிறப்புற வெளிப்படுத்திக் காட்டுவன. பேருண்மையும் பேரழகும் வரம்பு கடந்த செம்மையும் இறைவனுக்குரிய குணங்களாகச் சமய நூல்களாற் கூறப்பட்டன. இவைதம்மை வெளியிட்டுரைக்கும் ஆற்றலுடைமையி னுலேதான் மொழிகள் தெய்வத்தன்மையுடையவாகக் கருதப்பட்டன.

— உயர்திரு விபுலாநந்த அடிகளார்

# குரு சிஷ்யக் கல்வி முறை

மு. ஞானப்பிரகாசம், B. A., B. Sc.

பாரத நாடு உலகுக்கு வழங்கக் கூடிய செல்வங்கள் பலவற்றுள் குரு சிஷ்யக் கல்வி முறையும் ஒன்று. இக் கல்வி முறை மிகப் பழைய வேத காலத்திலும் இருந்து வந்திருக்கிறது. ஒரு குருவும் ஒரு சிஷ்யனும் ஒருங்கு சேர்ந்து அன்பினுல் ஒன்றுபட்டுக் கல்வியைப் பயிற்றியும் பயின்றும் வந்த முறையே வேத கால முறை. "எங்கள் இருவரையும் இறைவன் போஷிப்பானுக. எங்கள் கல்வி உலகெங்கும் ஒளி வீசிப் பிரகாசிப்பதாக" என வரும் வேத மந்திரங்கள் ஒரு குரு, ஒரு சிஷ்யன் என்ற முறையில்தான் வேத காலக் கல்வி நடைபெற்று வந்திருக்கின்றது என்பதைக் காட்டுகின்றன. தொடர்ந்து வந்த காலத்தில் குரு சிஷ்யக் கல்வி முறையில் சிறிது மாற்றம் ஏற்பட்டு, ஒரு குருவும் நாலு, ஐந்து சிஷ்யர்களும் ஒருங்கு சேர்ந்தே இக் கல்வி முறை நிகழ்ந்து வந்திருக்கின்றது எனக் கூறலாம். பாடத்தைத் தொடங்கும்பொழுது அவர்கள் அனைவரும் சேர்ந்து படிக்கும் சாந்தி பாடல் "நாங்கள் எல்லோரும் நல்லவனவற்றைக் காதால் கேட்போமாக; சிறந்தனவற்றைக் கண்ணுல் காண்போமாக" என இருப்பதனுல், குரு சிஷ்யக் கல்வி இரண்டுபேரளவில் நிற்காது, ஒரு சிறு கூட்டத்தை உட்படுத்தியே பிற்காலங்களில் நிகழ்ந்து வந்திருக்கின்றது எனக் கூறலாமல்லவா?

பாரத நாட்டின் பண்டைப் பெருமைக்குக் காரணமாய் இருந்தது இந்தக் குரு சிஷ்யக் கல்வி முறையே. பகைவரைச் சகோதரரென நேசிக்க, தன்னடக்கம் பெற, அறிவும் ஒழுக்கமும் சிறக்க இக் கல்வி முறை போன்ற சஞ்சீவி மருந்து பிறிதொன்றில்லை.

குரு சிஷ்யக் கல்வி முறை இதிகாச புராண காலங்களில் விருத்தியுற்றுக் குருகுலக் கல்வி என்ற பெயருடன் விளங்கி வந்திருக்கின்றது.

குருவும் மாணவர்களும் தூய அன்புடன் சேர்ந்து ஒரே குடும்பத்தினர் போல வாழத் தொடங்கிய தன்மையால், குருகுலம் என்ற பெயர் உண்டாயிற்று. இத்தகைய குருகுலங்கள் பல, மஹாபாரத காலத்தில், ஆற்ருேரங்களிலும் மலைச் சாரல்களிலும் கடற்கரைகளிலும் அழகிய இயற்கை அமைதி வாய்ந்த இடங்களிலும் இருந்து வந்திருக்கின்றன. இந்தக் குருகுலங்களில் குருவும் மாணவரும் ஒன்று கூடி வசிப்பர். மாணவர் குருவுக்குப் பணிவிடை செய்வதன்மூலம் குருவின் தூய பழக்க, வழக்க, ஒழுக்கங்கள் மாணவரிடத்தில் இயற்கை

யாகவே படியத் தொடங்கிவிடும். மாணவர்களும் குருபக்தி, அன்பு முதலிய சிறந்த குணங்களையும் பெற்று உண்மை மனிதர்களாக விளங்குவர். குருகுலத்தின் தனி ஆசிரியராகிய குருவும், இறைபக்தி, தூயமனம், நல்லொழுக்கம் ஆகிய இவற்றிற்கு ஓர் உறைவிடமாகவே திகழ்வர். அக்காலத்துக் குருகுல மாணவர்களுக்குப் பெரிய பாடப் புத்தகம் அவர்களது குருவேயா கும். முனிவர்களென்றும் இரிஷிக ளென்றும் நாங்கள் குறிப்பிடுவ தெல்லாம் அக்காலத்துக் குருகுல வாழ்வு நடாத்திய குருமாரையே யாம்.

இன்றும் பாரத நாட்டில் இரண்டு பெரிய குருகுலங்கள் அதன் பண்டைய பெருமையைப் பாதுகாத்து வருகின்றன. ஒன்று, கவி இரவீந்திரநாத தாகூர் அவர் களால் தாபிக்கப்பெற்ற **சாந்தி நிகேதனம்** என்பது: அது கல்கத் தாவிலிருந்து சுமார் நூறு மைல் தூரத்தில் போல்பூர் என்ற இடத் திற்கு அருகாமையிலுள்ளது. இந் திய தேசத்தின் ஆன்ம வித்தையை உலகெல்லாம் பரப்பவும், மேனாட் டுக் கலைகளைக் கீழ்நாட்டாரும், கீழ் நாட்டுக் கலைகளை மேனாட்டாரும் அறிந்து நன்மையுறவும் கலை ஆராய்ச்சிகள் புரியவும் சிறந்த இயற்கைச் சூழ்நிலையில் சாந்தி நிகேதனம் தாபிக்கப்பட்டுள்ளது. மேனாட்டு மாணவரும் இக் குரு குலத்திற் சேர்ந்து அமைதியான வாழ்க்கையை நடாத்தி ஆன்ம வித்தை பயின்று, சனாதன தர்மத் தின் உண்மையை உணர முயன்று கொண்டு வருகின்றனர். கவி இர வீந்திரர், தமது முதுமைப் பருவத் திலும், மாணவரோடு உடனு றைந்து ஆடிப்பாடி, இயற்கை வணக்கமும், இறை வணக்கமும் செலுத்திச் செலுத்தி வந்தமையால் தான் இந்தக் குருகுலம் இன்றும் உலகெங்கும் ஒளி வீசிக்கொண்டிருக் கின்றது.

**ஹரித்துவாரத்திலும்** ஒரு குரு குலம் உளது. இமயமலையின் அடி வாரத்தில், கங்கா நதியின் இடக் கரையில், அற்புதமான இயற்கைச் சூழலின் மத்தியில் இது அமைந்துள் ளது. இக் குருகுலம் ஆரம்பத்தில் வேதநூற் கல்வி, வேதாந்தக் கல்வி முதலியவற்றை நல்ல இயற்கைச் சூழலில் மாணவர்க்குப் புகட்டுதல் வேண்டும் என்ற நோக்கத்துட னேயே தொடக்கப்பட்டது. காலப் போக்கை அநுசரித்து இப்பொழுது அங்கு மருத்துவக் கல்வி, விவசா யக் கல்வி, தொழிற் கல்வி முதலி யனவும் குருகுல முறையில் நடை பெற்று வருகின்றன என அறிகின் ரேம். கவி இரவீந்திரநாத தாகூர் அவர்களின் சாந்தி நிகேதனம் என் னும் குருகுலத்தில் கலாசாரக் கல் விக்கே முதலிடம் கொடுக்கப்படும் தன்மைபோல ஹரித்துவாரக் குரு குலத்தில் ஒழுக்கக் கல்விக்கே முத லிடம் கொடுக்கப்படுகிறது. இரு குருகுலங்களிலுமிருந்து வெளிப் போந்தவர்கள் தாயகப் பற்று, தாய்மொழிப் பற்று, விவசாயப் பற்று முதலியவற்றில் சிறந்து, அடக்கத்துடன் பொது மக்களுடன்

கலந்து சமய சேவை, தேச சேவை முதலியன செய்து வருகின்றனர்.

எங்கள் ஈழத் தாய்நாட்டில் **சிவானந்த குருகுலம்** என ஒன்று திருக்கேதீஸ்வரத்தில், அற்புதமான இயற்கைச் சூழலில் அமைந்து, சென்ற பத்தாண்டுகளாக நிலை பெற்று, பெரிய சேவை செய்து வந்திருக்கிறது. இப்பொழுது யாது காரணத்தினாலோ அது மூடப்பட்டிருக்கிறது என அறிகிறோம்.

இறைவன் சந்நிதியில் இயற்கை அன்னையின் மடிமீதிருந்து, பிள்ளைகள் நல்லொழுக்க முறைகளையும் கல்வியறிவினையும் தூய வாழ்வினையும் பெறவேண்டுமெனில், மூடப்பட்டதாகிய சிவானந்த குருகுலம், திருக்கேதீஸ்வரத்திலேயே மீண்டும் திறக்கப்படுதல் வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனின் திருவருளை வணங்குகின்றோம்.

## காரணம் யார்?

பெருந்தொகையினரான உழைப்பாளி மக்கள் விரல்விட்டு எண்ணக் கூடிய ஒருசில சோம்பேறிகளுக்குக் கீழ்ப்படிந்து விடுகிறார்கள்; அவர்களுடைய உழைப்பும் அவர்களுடைய வாழ்க்கையும் இச் சோம்பேறிகளின் கைக்குள் அடங்கிக் கிடக்கின்றன...... இந்த நிலை, முக்கியமாக இந்தியாவிலே மிக்க விநோதமாயிருக்கிறது. ஏனெனில், ஒப்பற்ற உடல்வலியும் அறிவின் திறனும் ஒருங்கே படைத்தவர்களான மக்கள், இருபது கோடிக்கு மேற்பட்ட தொகையினர் வாழ்கிறார்கள். ஆனால், இவர்கள் அறிவு ஒழுக்கத்திலே தங்களுக்கு முற்றிலும் புறம்பானவர்களும் சமயவொழுக்கத்திலே தங்களிலும் மிகமிகத் தாழ்ந்தவர்களுமான ஒரு சிறு கூட்டத்தாரின் பிடியிலே அகப்பட்டு விழிக்கிறார்கள்.

வியாபாரஞ் செய்ய வந்த ஒரு கம்பனிக்காரர்கள் இருபதுகோடித் தொகையினரான மக்களை அடிமைப்படுத்தினார்கள். மூடநம்பிக்கை சிறிதுமில்லாத ஒரு மனிதனிடம் இதைச் சொல்லிப் பாருங்கள்; இச் சொற்களின் பொருள் என்ன என்பதை அவன் உணரமாட்டான். முப்பதாயிரம்பேர் — பெரிய வஸ்தாத்துக்கள் அல்ல, பலங்குறைந்த சாமான்ய மக்கள் — வீரமும் அறிவும் ஆற்றலும் சுதந்திரவேட்கையும் மிக்கவர்களான இருபதுகோடி மக்களை அடக்கிப் பணியவைத்துவிட்டார்கள் என்றால் இதற்குப் பொருள் என்ன? முப்பதாயிரம், இருபதுகோடி என்ற எண்களைப் பார்க்கும்போது என்ன தெரிகிறது? இந்தியரை அடிமைப்படுத்தியது ஆங்கிலேயரல்ல; இந்தியர் தம்மைத்தாமே அடிமைப் படுத்திக்கொண்டார்கள் என்பது விளங்கவில்லையா?

— ரோல்ஸ்ரோய்

# சமயக் கல்வியின் எதிர்காலம்

பண்டிதர் மு. கந்தையா, B. A.

கல்வி எதற்கு? என்ற வினவிற்குக் காலாகாலங்களில் வெவ்வேறு விடைகள் கிடைத்து வருகின்றன. அறிவை வளர்த்தற்குக் கல்வி என்பாரும், சமூக பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தவே கல்வி என்பாரும், பிள்ளைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குதற்குக் கல்வி என்பாரும் ஆங்காங்கு இருந்து வருகின்றனர். இவ்விடைகளுள் நான்காவது விடையே மிகமிகப் பொருத்தமான விடையென்று இன்றைய அறிஞர்களிடையே ஓர் அபிப்பிராயம் நிலவி வருகின்றது. குறித்த **ஒளிமயம்** என்பதென்னை? என்று விசாரிக்கின்றபோது, பிள்ளைகள் அறியாமை வசப்பட்டு உழலாமல், வாழ்க்கைக் குறைபாடுகளால் நலியாமல், சீர்திருத்தமான நல்வாழ்வு வாழும் நிலையே குறித்த **ஒளிமயம்** என்பார் பலர். இந்துக்களாகிய நமது பாரம்பரியப் பண்பாட்டு விளக்கத்திலே பார்க்கின்றபோது இந்த **ஒளிமயம்** இன்னும் இன்னும் நுணுகி நுழைந்து பொருள் கொள்ளப்படவேண்டியதாகின்றது.

நமக்குத் தற்போது வாய்த்துள்ள இவ்வாழ்வுதான் வாழ்வல்ல; இனியும் வாழ்விருக்கின்றது. லௌகீகப் பேறுகள்தான் நாம் பெறவேண்டிய பேறுகளல்ல; ஆத்மீகப் பேறென்று நமக்கு அத்தியாவசிய தேவையாயிருக்கின்றது. ஆகவே நமது கல்வி இம்மை வாழ்வுக்குப்போல மறுமை வாழ்வுக்கும் ஒளியூட்டத் தக்கதாதல் வேண்டும்; லௌகீகச் சீர்திருத்தம்போல ஆத்மீகச் சீர்திருத்தத்திற்கும் ஒளியூட்டியே ஆகவேண்டும்.

இப் பெருநோக்கத்தை முற்கொண்டு நம்மவர்கள், கல்வி சமய அடிப்படையில் அமையவேண்டும் என விரும்பினார்கள். பிள்ளைகளில் ஒவ்வோர் பகுதியினரும் தத்தமது பிறப்புரிமையான சமய ஆசாரபூர்வமான வாழ்க்கைப் பண்பாட்டுக்கு விரோதமில்லாத வகையிலே கல்வியூட்டப்படவேண்டும் என்ற கருத்தைப் பிரபல்யப்படுத்தினார்கள். அம்மட்டிலுமமையாமல் சமய உண்மைபற்றிய அறிவும் சமய சாதனையையொட்டிய பயிற்சிகளும் பாடசாலைக் கல்வியின் ஒரு பகுதியாக இடம்பெறவேண்டும் எனவும் கருதினார்கள். இதன்விளைவாக, பாடசாலைக் கல்வியில் சமயக்கல்வி முக்கியத்துவம் பெறுவதாயிற்று.

நமது பாரம்பரியப் பண்பாட்டின் ஆரம்பம் வேதப் பண்பாட்டிலே கால்கொள்கிறது. வேத காலத்துக் கல்வி குருகுலக்கல்வி எனப்படும். பலவகையான சாஸ்திர அறிவுகளுடன் ஆத்மீக விழிப்பும் பெற்றுள்ள பக்குவியாகிய பெரியாரொருவர் குரு எனப்படும் நிலைக்குரியராய் இருந்தார். பிள்ளைகள் கற்கும் பராயமடைந்ததும்

அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டனர். அவ்வகையில் குருபாத சேவைசெய்து அவரை நீங்காமலே யிருந்து கற்றுவெளியேறும் பிள்ளைகள், தாமும் ஆத்மீக ஒளி பெற்றவர்களாகவே வெளியேறினர். தற்போது நமக்குக் கிடைக்கும் வேத, உபநிடத மந்திரங்கள் இதனை வெளிப்படுத்துகின்றன. 'தேஜஸ் விஞு வதீதம் அஸ்து' 'நாம் கற்ற கல்வியினுல் ஆத்மீக ஒளியுள்ளவர்களாவோம்' என்ற மந்திரம் கடோபநிஷத்திலே காணப்படுகின்றது. 'தமசோ மாஜ்யோதிர் கமஸ்' 'இருளிலிருந்து எம்மை ஒளிக்கு இட்டுச்செல்க' என்கின்றது ஈசாவஸ்து உபநிஷத்.

இக்குருகுலக் கல்விமுறை அருகி வந்த பின்னைய காலத்தில் தோன்றிய திண்ணைப்பள்ளிகளிலும் அந்நிலைமையே கடைப்பிடிக்கப்பெற்று வந்துள்ளது.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழா அ ரெனின்.

என்ற வள்ளுவர் கருத்தைப் பிரதிபலிக்கும் முறையில் தமிழ் வேந்தரும் பிறரும் ஆலயத்தில் ஓர் அங்கமாகக் கல்விக் கூடங்களை அமைத்தனர். இடைக்காலத்தில் கல்விப் பணியிற் பெரிதும் ஈடுபட்ட சமணர்களும் தங்கள் ஆலயங்களாகிய பள்ளிகளிலேயே கல்விநிலையங்கள் அமைத்து நடத்தினர். கல்விநிலையம் பள்ளிக்கூடம் என வழங்கப்பெற்றதற்குக் காரணம் வேறியாங்காண்டலரிதாகும். கல்வித்துறையிற் பெரிதும் முயன்ற நம் நாட்டுப் பௌத்தர்களும் தங்கள் ஆலயச் சூழலிலேயே கல்விக்கூடங்களை அமைத்தனர். அவர்கள் ஆலயம் 'பாஞ்சல' என்றும் பள்ளிக்கூடம் 'பாசல' என்றும் வழங்குவதில் ஓர் ஒப்புமை காணக்கிடக்கின்றது. நம் நாடு புகுந்த மேலைநாட்டினர் தாமும் தேவாலயச் சூழலிற் பள்ளிக்கூடங்கள் நடாத்தியமை கண்கூடு. இந்துக்களின் கல்விக்கு அந்நியர் வருகையால் இடையூறு நேர்ந்தமைகண்டு சீர்திருத்தப் பணி மேற்கொண்ட நம் **நாவலர்பெருமானும் சேர் பொன். இராமநாதனும்** பண்டைய நிலைமையைப் புனருத்தாரணஞ் செய்து வைத்தனர். இவர்களின் திவ்விய முன்மாதிரியை அடியொற்றி எழுந்த **சைவ வித்தியா விருத்திச் சங்கம்** சமய அடிப்படையிற் கல்வி என்ற கொள்கைவழி நின்று நமது பிரதேசத்தில் நூற்றுக்கும் அதிகமான சைவப் பாடசாலைகளை நிறுவி நிர்வகித்து வந்துள்ளது. இதற்குச் சமமான முயற்சிகள் தென்னிலங்கையிலும் பௌத்த மக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வகையில் இந்த நூற்ருண்டின் நடுப்பகுதி வரையிலும் நம்நாட்டுக் கல்வியில் வேதப்பண்பாட்டின் சாயல் மிளிர்ந்து வந்திருப்பக் காண்கின்ருேம்.

**இனி நிலைந் திரக்க மாகின்று.**

இந்நூற்ருண்டின் நடுப்பகுதிக்குமேல் கல்வி நிலையங்கள் அனைத்தும் அரசுடைமையாயின. இக்காலம் வரையிலும் கல்விப் பணிக்குப் பொறுப்பாயிருந்த சமய ஸ்தாபனங்கள் தம் தொடர்பிழந்தன. அவ்வச் சமயப் பிள்ளைகள் அவ்வச் சமய அடிப்படையிற் கல்வி பயிலும் நிலை ஆட்டங்காணத் தொடங்கியிருக்கின்றது.

இன்றைய அரசாங்கக் கொள்கையும் அதன்வழி கல்விப்பணியாற்றும் அறிஞர் கருத்தோட்டமும் சோஷலிசப் பாதையை நாடுகின்றன. சமூகசீர்திருத்தமும் பொருளாதர முன்னேற்றமும் மட்டுமே கல்விக்கொள்கை என்ற கருத்து வலுத்து வருகின்றது. எனினும் சோஷலிசம் சமயத்துக்கும் இடங்கொடுக்காமல் விடவில்லையென்னுமளவுக்கு எல்லாப் பாடசாலைகளிலும் சமயபாடத்துக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. ஓரளவில் சமயபாடம் கட்டாயமான ஒரு பரீட்சைப் பாடமாகவும் விதிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கிடையில் தத்தமது சமயம்பற்றிய தனித்துவ உணர்வு பிள்ளைகளிடம் நிலைபெறுதல் பூரண சோஷலிசப் பேற்றுக்கு இடையூறுமே என்ற அச்சமும் உள்ளூர ஒரு சார் இருந்து வருகின்றது. அரசாங்க ஆதரவில் இயற்றப்பெறும் சமயபாடப் புத்தகங்களிலேயே பிள்ளைகள் தத்தம் சமயம்பற்றிய பாடங்களுடன் மறுசமயங்கள் பற்றிய பாடங்களும் குறைந்தபட்சம் மூன்று பாடங்களாவது படிக்க வசதிசெய்யவேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்கள் மத்தியிலே சமீப காலத்தில் எழுந்த அபிப்பிராயமொன்று மேற்கூறிய உண்மையை ஊர்ஜிதம் செய்கின்றது.

இவற்றை உற்றுநோக்குங்கால் சமய அறிவுக்காகவே கல்வி என்பது ஆதிநிலைமை. சமய அடிப்படையில் நிகழும் கல்வியிலே சமயபாடத்துக்குத் தனியிடம் என்பது அடுத்த நிலைமை. சமய அடிப்படையிலமையாத சோஷலிச கல்வியிலே சமய பாடத்துக்கும் ஓரிடம் என்பது தற்போதைய நிலைமை. சோஷலிச அடிப்படையிலான கல்வியிலே சோஷலிசப் பாங்கான சமயக் கல்விக்கும் ஓரிடம் என்பது இனி வரவிருக்கும் நிலைமை எனத்துலாம்பரமாகத் தோன்றுகின்றது. இப்பினைய நிலைமை ஏனைய சோஷலிச நாடுகளில் இடம்பெற்றுள்ளவாறு சமய உணர்வில் மந்தீகரணத்தை விளைவிக்கும் என அஞ்சுவதற்கு நியாயமுண்டு.

ஏனைய பாடங்கள்போலச் சமயம் அறிவுநெறிப் பாடமாகமட்டும் அமைதல் பொருந்தாது. உணர்ச்சியும் ஒழுக்கமும் இடம்பெறாத சமய அறிவுப்போதனை, சமயக்கல்வியின் பயனைத் தருதற்குச் சற்றேனும் தகுதியற்றதாகும் என்பது ஆன்றோர் முடிபு. மேற்கண்டவாறமையும் சோஷலிசப் பாங்கான சமயக்கல்வியிலே உணர்வும் ஒழுக்கமும் இடம்பெறுதல் அசாத்தியமே அசாத்தியம்.

இக்கட்டத்தில், பாடசாலைக்குப் புறம்பாக அமைந்து சமயக் கல்விப்பணிபுரியும் **விவேகானந்த சபை, சைவபரிபாலன சபை** போன்றவற்றின் முயற்சிகள் தற்போது அதிகரிக்கப்பட்டுவருதல் மகிழ்ச்சிகரமானதே. எனினும் அவைகளும் சமய அறிவுப்பரீட்சை நடத்தவதும் பரிசில் வழங்குவதும் என்ற அளவில் அமைந்து விடுதல் ஆகாது. உண்மையான சமயஉணர்வும் ஒழுக்கமும் அமையும் பாங்கில் அவைகள் பிள்ளைகளுக்கு நேர்முகமான சமயக்கல்வி ஊட்டுமாயின் அது மிகமிக வரவேற்கற்பாலதொன்றுகும். பாடசாலைச் சமயக் கல்வியிற் காணும் குறைவை ஓரளவில் நிறைவு செய்வதுமாகும்.

# அமெரிக்க மிசனரிகளின் கல்வித் தொண்டு

மயிலங்கூடலூர் பி. நடராசன்

'கல்வியின் பயன் யாது?' என்ற வினாவுக்கு 'வீடடைதல் நூற்பயனே' என்ற விடை கிடைக்கிறது.

எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—
மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற்
பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.

என்ற வெண்பாவும் இதனையே வலியுறுத்துகின்றது. சைவர்க்கு மட்டுமன்றிச் சைனர், பௌத்தர், கிறீத்தவர் முதலியோர்க்கும் இது பொருந்துவதாகும். எமது நாட்டைக் கைப்பற்றி ஆண்ட போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலானோரும் தமது மதத்தைத் தேசிய இனத்தினரிடையே பரப்ப முயன்றனர். பிற மதத்தினரெல்லாம் அஞ்ஞானிகள்; பாவிகள்; அவர்களை மனந்திருப்பி வீட்டுநெறியில் ஆற்றுப்படுத்த வேண்டுமென்ற கொள்கையே இம் முயற்சிகளின் மூல காரணமாகும். இதே நோக்கை அடிப்படையாகக்கொண்டே கிறீத்தவ மிசனரிகள் எமது நாட்டுக்கு வந்தனர். அவர்கள் சமயப் பணியைச் சிறப்பாக நடாத்தும் நோக்குடன் கல்விப் பணியையும் மேற்கொண்டனர்.

மேல்நாட்டினரின் வருகைக்கு முன் குருகுலக் கல்விமுறை தமிழரிடையே நடைமுறையிலிருந்தது ஓர் ஆசிரியரைச் சார்ந்து ஒரு மாணவனோ சில மாணவரோ பயிலும் முறை இது. கண்ணெனத்தகும் கல்வியை எல்லோரும் பயிலும் வாய்ப்பை நல்கிய நவீன பாடசாலைக் கல்விமுறை மேல்நாட்டாரின் வருகையால் ஏற்பட்டதாகும். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோர் சமயக் கல்வியூட்டலையே தமது குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இங்கு வந்த மிசனரிகள் சமயக் கல்வியுடன் பொதுக் கல்விக்கும் வழி வகுத்தனர். பொதுக் கல்விக்கும் தமிழ்க் கல்விக்கும் அதிக சிறப்பு வழங்கியவர்கள் அமெரிக்க மிசனரிகளே ஆவர்.

1801 ஆம் ஆண்டு ஆளுநர் பிரடெரிக் நோர்த் காலத்தில் தாய்மொழிக் கல்வி விருத்திக்காக நிறுவப்பட்டு அரசினர் செலவில் நடைபெற்றுவந்த பாடசாலைகள் அனைத்தும் ஆளுநர் தோமசு மெயிற்லண்ட் காலத்தில், 1805 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டன என வரலாறு கூறுகிறது. இதற்குப் பின் அறுபது வருடங்களாய்ச் சுதேசக் கல்வியை விருத்திசெய்ய அரசினர் யாதும் முயற்சி செய்யவில்லை.[1] மக்கள் தங்களுடைய பணப்பையைத் திறப்பதில் மிகவும் தாமதமுடையவர்களாகவும் ஓர் இந்துப் பாடசாலை வேண்டும் என்ற கருத்துக்களை அறியக் கூடிய உயிர்ப்பு இல்லாதவர்களாகவும் காணப்பட்டனர்.[2]

இந்நிலையில், இங்கு வந்த பல்வேறு மிசனரிகள் யாழ்ப்பாணத்தில் சமயத் தொண்டையும் கல்வித் தொண்டையும் மேற்கொள்ள அதிக வாய்ப்பு ஏற்பட்டது. உவெசிலியன் மிசனரிகள் (1814), அமெரிக்கன் மிசனரிகள் (1816), சேட்சு மிசனரிகள் (1818)முதலிய சமய நிறுவனங்கள் வேம்படி, தெல்லிப்பழை, நல்லூர்

முதலிய இடங்களில் தமது பணியை ஆரம்பித்தனர். வெவ்வேறு கால கட்டங்களில் இவர்களுடைய மதத் திணிப்புச் செயல்கள் பல்வேறு அறி ஞர்களால் கண்டிக்கப்பட்டுள்ளன. ஆறுமுகநாவலர், உத்தியோகர் லக்ஷணக் கும்மி ஆசிரியர், செந்திநாதையர் முதலி யோர் மிசனரிகளின் பழிச் செயல் களை வன்மையாகக் கண்டித்தனர். சமய விடயத்தில் மிசனரிமாரின் சகிப்புத் தன்மை இன்மையின் வேகம் காலத்திற்குக் காலம் மாறிவருகிறது. இந்துக்களின் தலை சிறந்த சீர்திருத்தவாதி (ஆறுமுகநாவலர்) 1879ஆம் ஆண்டில் மறைந்த பின்னர் இவ் வேகம் வளர்ந்துவருகிறது என்று பொன். இராமநாதன் அவர்கள் சட்ட சபை யிற் குறிப்பிட்டுள்ளார்கள்.

முடிமன்னர் காலத்தில் சமண ரும் பௌத்தரும் தமிழின், தமிழ ரின் வரலாற்றிற் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தியதுபோல, பதினாறும் நூற்றாண்டின் பின்னுள்ள சில நூற்றாண்டுகளில் கிறீத்தவர்க ளும் தமது தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளனர். அவர்கள் தேசிய மதங் களுக்கும் கலாசாரத்துக்கும் செய்த தீமைகளை ஒதுக்கிவிட்டுப் பார்க்கும்போது அவர்களுடைய தொண்டால் தமிழ்மொழி வளம் பெற்ற தன்மை மேலோங்கி நிற்கக் காண்கிறோம். காலந்தோறும் ஏற் பட்ட புறத்தாக்குதல்களை எதிர்த்து நின்று எதிரிகளையே தன் வசமாக்கிக்கொண்டு அவர்களைத் தனது அடிமைகளாக்கித் தன்னை வளர்க்கச் செய்த பெருமை தமி ழுக்கு உண்டு. ஆங்கிலத்தோடும், சிலுவையோடும், விவிலியத் தோடும் வந்த அமெரிக்க மிசனரி கள் ஆங்கிலத்தின்மூலம் சமயம் வளர்க்க முடியாது என்பதை உணர்ந்தபோது சமண, பௌத்தத் துறவிகளைப்போலத் தமிழைத் தழு விக்கொள்ள நேர்ந்தது. இவர்களுட் சிலர் தமிழுக்காகத் தமது வாழ் வையே அர்ப்பணித்தனர். இதனால் தமிழ் நவீன உலகில் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய மொழியாக விருத்தி யடைந்தது.

வண. எட்வேட் வாரென் (Rev. Edward Warren) என்பவர் 1816ஆம் ஆண்டு யூலை மாதம் 11ஆம் நாள் யாழ்ப் பாணத்திற்கு வந்தார். இவர் இங்கு வருகைதந்த முதலாவது அமெரிக்க மிசனரியாவர். இவரும் பின்னர் இவருடன் வந்து சேர்ந்துகொண்ட வண. கலாநிதி டானியல் பூர் (Rev. Dr. Daniel Poor) அவர்களும் 1816, ஒற் ரோபர் 15ஆம் நாள் தெல்லிப்பழையில் குடியமர்ந்து தமது பணியை ஆரம் பித்தனர். முதல் இலவசக்கல்விப் பாடசாலை இவர்களால் தெல்லிப் பழையில் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், கவிதை என்பவற்றோடு கணிதம், புவியியல், சமயம் என்பனவும் இங்கு கற்பிக்கப்பட்டன. சில காலத்திற் குப் பின்புதான் ஆங்கிலம் புகுத்தப் பட்டது. தமிழ்மொழிமூலம் பயிற் றும் முறை ஏனைய மிசனரிகளிடமில் லாத சிறப்பியல்பாக இவர்களிடம் இருந்தது. இதனைப் பிரித்தானிய அரசின் ஆளுநராகப் பணியாற்றிய ஒருவர் பின்வருமாறு கண்டித்துள் ளார்:- அமெரிக்க மிசன் நடைமுறையிற் கொண்டிருக்கும் ஆங்கிலந் தவிர்க்குங் கொள்கை பேராபத்தானதும் தற்கொலைக் கொப்பானதுமாகும்[3]. எனவே, அமெ ரிக்க மிசனரிகளின் ஆரம்பகால முயற்சி எத்துணை உயர்ந்ததாக இருந்ததென்பது புலனாகின்றது.

1824ஆம் ஆண்டில் அமெரிக்க மிசனரிகளின் பொறுப்பில் 105 தமிழ்ப் பாடசாலைகளும் 16 ஆங் கிலப் பாடசாலைகளும் யாழ்ப்பா ணத்தில் இருந்தன. 1836ஆம் ஆண் டில் இத்தொகை 155 ஆக உயர்ந் தது. இப் பாடசாலைகளில் 7000 மாணவர் பயின்றனர். இப்பாட

சாலைகளுட் பெரும்பாலானவை இலவசப் பாடசாலைகளாக இருந்தன.

அமெரிக்க மிசனரிகள் யாழ்ப்பாணம் வந்தபோது இரண்டு பெண் மணிகள் மட்டுமே இங்கு கல்வியறிவு வாய்க்கப்பெற்றவர்களாக இருந்தனர் என அம்மிசனரிகளில் ஒருவர் எழுதியதாக யாழ்ப்பாண வைபவ கௌமுதி ஆசிரியர் கூறுவர். ''ஆயிரம் ஆடவர்களுக்கு, ஒழுக்க நெறியைப் போதிப்பதைவிட ஒரு பெண்ணுக்கு அதனைப் புகட்டுவது மேலானது'' என்றார் விவேகானந்த அடிகளார். இது பெண் கல்வியின் பெருமையை உணர்த்தும். இதனை உணர்ந்த அமெரிக்க மிசனரிகளும் 1824ஆம் ஆண்டு உடுவிலில் பெண்களுக்கான ஒரு பாடசாலையை நிறுவினர். இதுவே ஆசியாவில் பெண்களுக்காக நிறுவப்பட்ட முதற் பாடசாலையாகும். உவின்சுலோ அகராதியைத் தந்த வண. உவின்சுலோ அவர்களின் துணைவியாரான திருமதி எச். டபிள்யு. எல். உவின்சுலோ அம்மையாரின் தலைமையில் இக் கல்லூரி நிறுவப்பட்டது. 1918ஆம் ஆண்டு வரையிலுள்ள காலப்பகுதியில் 2,500 பெண்கள் இதிற் கல்வி பயின்றனர். 1818ஆம் ஆண்டிலேயே தெல்லிப்பழையிற் பெண் கல்விக்கு வித்திடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென் றெண்ணி யிருந்தவர்' மாண்டுபோகப் பெண்கள் பழந்தமிழகப் பெண்கள் போல மீண்டும் கல்விபெற வழி வகுத்தவர் அமெரிக்க மிசனரிகளே.

தெல்லிப்பழையில் முதற் கல்வி நிலையத்தை நிறுவிய வண கலாநிதி பூர் தலைமையில் 1823ஆம் ஆண்டு யூலைத் திங்கள் 23ஆம் நாள் வட்டுக் கோட்டைச் செமினரி என்னும் உயர்கல்வி நிலையம் நிறுவப்பட்டது. இது அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய இடங்களிலுள்ள பல்கலைக் கழகங்களின் தரத்தில் நிறுவப்பட்டது. ஆசியாவில் நிறுவப்பட்ட முதல் ஆங்கிலப்பாடசாலை என்ற பெருமை இதற்குக் கிடைத்தது. இச் சாத்திர சாலையிலே மேலைத்தேச வித்தியா கழகங்களிலே கற்பிக்கப்படுகின்ற கணித சாத்திரம், தத்துவ சாத்திரம், ககோள சாத்திரம், பகோள சாத்திரம், இரசாயன சாத்திரம், நியாய சாத்திரம், இலக்கண நூல்கள், இலக்கிய நூல்கள் ஆதியனவற்றுடன் தமிழிலக்கண, இலக்கியங்களும், சமஸ்கிருத, கிரேக்க, எபிரேயு ஆதியாம் பாஷைகளும் படிப்பிக்கப்பட்டன.[4]

இருமொழிப் பாடசாலையாகிய செமினரியில் அறிவுத்துறை சார்ந்த பாடங்கள் போதிக்கப்பட்டன வெனினும் தமிழ் இலக்கணம், தமிழிலக்கியம், இந்து விண்ணியல் என்பனவற்றுக்குச் சிறப்பிடம் தரப்பட்டது. கந்தபுராணம், நைடதம், நன்னூல், திருக்குறள் முதலியனவும் இங்கு கற்பிக்கப்பட்டன. இதன் உயர் திறமைக்குச் சான்றாகத் திகழ்ந்தவரே சி. வை. தாமோதரம் பிள்ளை, கரோல் விசுவநாதபிள்ளை, கென்றி மாட்டின், நெவின் சிதம்பரப்பிள்ளை, ஆனல்ட் சதாசிவம் பிள்ளை, எட்வேட் கனகசபைப் புலவர், உவைமன் கதிரைவேற்பிள்ளை, பாவலர் துரையப்பாபிள்ளை போன்றோர். இவர்கள் தமிழுலகின் ஒளி விளக்குகளாக இன்றும் நின்று நிலவ வட்டுக்கோட்டைச் செமினரியே காரணமாகும்.

எனினும் இக் கல்வி நிலையம் சமயக் கல்விக்கு உதவவில்லை என்பதனால் 1855இல் நிறுத்தப்பட்டது.[5]

மிக்கநன் மைகள்வி ளங்கு மமெரிக்க
மிசன் முன்னர் தந்த செமினரி
தக்க வுயர்கல்வி நம்மவர்க் கீந்து
தழைத்து வளர்ந்தது சங்கமின்னே.

வட்டு நகர்ச்செமி னரி பிறந்தபின்
வாகா முயர்கல்வி மாகமுதை
கட்டெறும் பானது போல மிகவுங்
கரைந்து குறைந்தது சங்கமின்னே.

என்று பாவலர் துரையப்பாபிள்ளை கழி விரக்கம் கொள்ளக் காண்கிறோம்.[6]

இதேயிடத்தில் 1872ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கல்லூரி நிறுவப்பட்டது. அமெரிக்க மிசனரிகள் தமது திட்டங்களைத் தடையின்றி நிறைவேற்ற அநுமதிக்கப்பட்டிருந்தால் இது (யாழ்ப்பாணக் கல்லூரி) ஈழத்தின் முதலாவது நவீன பல்கலைக் கழகமாக உருவாகியிருக்கும் என்கிறார் வரலாற்று நூலாசிரியர் லூடோவிக் அவர்கள்.[7] இலங்கைப் பல்கலைக் கழக யாழ். வளாகமாக மாறியிருக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி தமிழன்னையின் தவப்புதல்வர்களைப் பண்டு போல் இன்றும் உருவாக்குவதாக.

நவீன மருத்துவக் கல்வியிலும் அமெரிக்க மிசனரிகள் முன்னோடிகளாக விளங்கினர். 1820ஆம் ஆண்டு மருத்துவர் ஸ்கடர் அவர்கள் பண்டத்தரிப்பில் மருத்துவ நிலையமொன்றை நிறுவி நோயாளரைப் பரிகரித்து வந்தார். இவர் சிலருக்கு மேல் நாட்டு மருத்துவக் கலையைப் போதித்தார். இவரைத் தொடர்ந்து சமுல் பி. கிறீன் அவர்கள் மருத்துவ சேவைக்காக அமெரிக்காவிலிருந்து இங்கு வந்தார். இவர் மானிப்பாய் வைத்தியசாலையில் பணி புரிந்தார். இம் மருத்துவ நிலையம் கிறீன் வைத்தியரின் தலைமையிலே மருத்துவப் பல்கலைக் கழகமாக இயங்கி வந்தது. இங்கு மருத்துவம் ஆங்கிலத்திலும் தமிழிலும் கற்பிக்கப்பட்டது. அக் காலத்தில் மருத்துவ விஞ்ஞானம் தமிழிலே கற்பிக்கப்பட்டது என்பது வியப்புக்குரிய செய்தியாக உள்ளது.

கிறீன் வைத்தியர் தமிழிலே மருந்துவத்தைப் பயிற்றுவதற்கு வேண்டிய நூல்களையெல்லாம் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிட்டார். இந் நூல்கள் இவராலும் இவருடைய மாணவர்களாலும் மொழிபெயர்க்கப்பட்டன. பின் வரும் நூல்கள் அவரால் வெளியிடப்பட்டவையாகும்:

1. இரண வைத்தியம் (1867)
2. மனுஷ அங்காதிபாதம் (1872)
3. மனுஷ சுகரணம் (சுருக்கம்-1872)
4. வைத்தியாகரம் (1872)
5. கெமிஸ்தம் (1875)
6. வைத்தியம் (1875)
7. அருஞ்சொற்களை அடக்கிய அகராதி (1875)
8. மனுஷ சுகரணம் (முழுமை-1883)

இந்நூல்கள் ஏறத்தாழ 5000 பக்கங்களைக் கொண்டனவாயிருந்தன. நூறு ஆண்டுகளுக்கு முன் தனி ஒரு மனிதர் இத்துணைப் பெருஞ் சாதனையை ஆற்ற அவரிடமிருந்த துணிவும் தமிழ்ப் பற்றும் எல்லையற்றதாயிருந்திருக்க வேண்டுமெனலாம். இவருக்குப் படைத்துறை (Military) மருத்துவ நிலைய அதிபர் பதவி வழங்கப்பட்டபோது அதனால் தமது தமிழ்ப்பணி தடைப்படுமே என்று கவன்றார் என்னும் செய்தியே இவரது பெருமைக்கு உரைகல்லாகும்.

கிறீன் வைத்தியர் 1883ஆம் ஆண்டு மானிப்பாய் அச்சுக்கூடத்தில் வெளியிடப்பட்ட மனுஷ சுகரணம் என்ற உடற்றொழிலியல் நூலில், இப் புத்தகம் வருங்காலத்துத் தமிழருள் இக் கல்வியின் ஓட்டத்துக்குத் தொடக்கமான நிலையமாய் இருக்கட்டும். இவ்வோட்டம் மேற்குத் தேசத்தாருள் முன்கண்ட ஓட்டத்துக்கு நிகராகக்கடவது[8] என்று ஆணை வழங்கினர். எனினும், அன்றைய தமிழர் இதனை உதாசீனம் செய்தனர். இதனால் நாம் மருத்துவத் துறையில் ஒரு நூற்றாண்டு பின் தங்க நேர்ந்தது.

கல்வித்துறை விருத்திக்கு மூல காரணமாயமைந்தவற்றுள் அச்சுக் கலை சிறப்பிடம் பெறுகிறது. 1820ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் முதல் அச்சகம் நிறுவப்பட்டது. இவ் வச்சகத்தின் முதல் வெளியீடு முத்தி வழி என்ற நூலாகும். அச்சகம்

ஆரம்பிக்கப்பட்ட மூன்று ஆண்டுக ளில் பத்துலட்சத்து இருபதினுயி ரத்து எண்ணூறு பக்கங்களைக் கொண்ட நூல்களும் சிற்றேடுகளும் அச்சிடப்பட்டன. அச்சுக்கலை அறி முகத்தின் பேருக உதயதாரகை (Morning Star) என்ற செய்தி இதழ் 1841ஆம் ஆண்டு ஹென்றி மாட்டின் என்பாரை ஆசிரியராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளியானது. இதனைத் தொடர்ந்து பாலியர் நேசன் (1859) என்ற இதழும் மிசனரிகளால் வெளியிடப்பட்டது.

தமிழில் சொற்களின் பொருளை உணர்தற்கு உதவும் வகையில் நிகண் டுகள் எழுந்தன. இத்தாலியரான வீரமாமுனிவர் தமிழில் அகராதி முறைக்கு வழிகோலினுர். அவ ரது சதுரகராதி 1710ஆம் ஆண்டு தொகுக்கப்பட்டது. இம் முயற்சி யாழ்ப்பாணத்தில் அமெரிக்க மிச னரிகளால் விரிவுபடுத்தப்பட்டது. வீரமாமுனிவருக்குப் பின் சதுரக ராதியின் அமைப்பில் முதன்முத லில் வெளியான அகராதி யாழ்ப்பாண அகராதி (மானிப்பாய் அகராதி) எனப்படும் A Manual Dictionary of the Tamil Language ஆகும். 58,500 சொற் களைக் கொண்ட இவ்வகராதி[9] அமெ ரிக்க மிசனரிகளின் முயற்சியால் 1842இல் வெளிடப்பட்டது. வண. உவின்சுலோ அவர்களுடைய தமிழ் - ஆங்கில அகராதி 1862இல் வெளி யிடப்பட்டது.

அமெரிக்க மிசனரிகள் பாடசாலை களை அமைத்தனர்; பாடசாலைகளில் ஆண், பெண் இருபாலாரும் பயிலும் வாய்ப்பை ஏற்படுத்தினர்; இப் பாடசாலைகளிற் பயில்வோர்க்குத் தேவையான நூல்களை எழுதினுர் கள்; மொழிபெயர்த்தார்கள்; அச் சிட்டு வெளியிட்டார்கள்; இதற் காக அச்சகங்களை நிறுவினர்; சிறந்த கல்விப் பயிற்சி வழங்கும் ஆசிரியர் களை உருவாக்கப் போதனு நிலையங் களை நிறுவினர்; மருத்துவம், தொழிற்கல்வி முதலியவற்றுக்கான நிறுவனங்களை ஏற்படுத்தினர்; இப் பணிகள் மூலம் ஈழநாட்டினர், சிறப் பாக யாழ்ப்பாண மக்கள் உலகோடு சமமாக நிற்கவும், நவீன மாற்றங் களுக்கேற்பத் தம்மை மாற்றிக் கொள்ளவும் வழிகாட்டும் முன்னே டிகளாய் அமைந்தனர். அவர்களு டைய கல்வி நிலையங்கள் இன்று அரசு உடைமையாகிவிட்டன. கல் வித் துறையில் அவர்கள் பெற்றி ருந்த ஆதிக்கம் சட்டபூர்வமாக அகற்றப்பட்டுவிட்டது. இவ்வாறே இந்து, கல்தோலிக்க, பௌத்த கல்வி நிறுவனங்களின் கல்வித்துறை ஆதிக்கமும் முடிவுக்கு வந்துள்ளது. எனினும் இவற்றின் தொண்டுகள் கல்வித்துறை மறுமலர்ச்சியில் ஒரு பொற்காலச் சின்னமாக வரலாற் றில் நின்று நிலவுகின்றன.

---

1&4. யாழ்ப்பாண வைபவ கௌமுதி (1918) - வயாவிளான் க. வேலுப்பிள்ளை பக் 270 & 273.

2. பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றுண்டு விழா மலர் (1972) - த. வேலாயுத பிள்ளை பக். 28.

3&8. கிறீனின் அடிச்சுவட்டிலே (1967) - இ. அம்பிகைபாகன் பக். 43&62.

5. Proceedings of the First International Conference Seminar of Tamil Studies Vol. II A. Vimalachandra.


6. சிந்தனைச்சோலை (1960) பக். 32.

7. The Story of Ceylon - E. F. C. Ludowyke.


9. செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 35, பரல் 5, சனவரி 1961 பக். 223.

## பழம் பெருமைவாய்ந்த மயிலிட்டித் தேவாலயமும் இல்லமும்

அன்றும்





(படம்: 1672இல் ஒல்லாந்தில் வெளியிடப்பட்ட நூலில் உள்ளது)




இல்லத்தில் பாடசாலை நடைபெற்றது

இன்றும்

சிதைவுற்ற நிலையில் தேவாலய இல்லம்



தேவாலயத்தின் இன்றைய தோற்றம்



# வரலாற்றுப் பின்னணியில் மயிலிட்டி

— பொ. இரகுபதி

மயிலிட்டிச் சந்தியிலிருந்து கட்டுவன் சந்தியை நோக்கிச் செல்கின்ற வீதியில் சிறிது தூரம் சென்றால் இருபுறமும் அடர்ந்துள்ள பற்றைகளுக்கும், பனங்கூடலுக்கும் மத்தியில் 'அமெரிக்கன் மிஷன்' பாடசாலையொன்று இருக்கின்றது. ஆனால், பாடசாலையைக் காண்பதற்கு முன்பே கண்ணில் புலப்படுவது பாடசாலையையொட்டியுள்ள தேவாலயமொன்றின் சிதைந்த இடிபாடுகள். இதனாற்போலும் அமெரிக்கன் மிஷன் பாடசாலை என்றால் பலருக்குத் தெரிவதில்லை. **பேய்க்கோயில் பள்ளிக்கூடம்** என்றால்தான் அடையாளம் காட்டுவார்கள் அவ்வூர் மக்கள். பேய்க்கோயில் என்று அழைக்கப்படுவது உண்மையில் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட புரட்டஸ்தாந்து மதத் தேவாலயம். இத் தேவாலயத்தின் பின்னணியில் மறைந்திருக்கும் வரலாற்று உண்மைகள் பல.

வீதியிலிருந்து இறங்கிச் சிறிது தூரம் உள்நோக்கிச் சென்றால் தேவாலய முன்றிலுக்கு வந்து சேரலாம். முற்றத்தில் முருகைக் கற்கள் சிதறிக் கிடக்கின்றன. மேற்கில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட மலைவேம்பு மரமொன்று (மகோகனி) தேவாலயத்தின் மேற்குப்புறத்திலே காணப்படுகின்றது. இங்குள்ள சிதைவுகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று தேவாலயத்தின் சிதைவுகள். மற்றையது தேவாலயத்தைச் சார்ந்த இருமாடிக் கட்டிடம் ஒன்றின் சிதைவுகள். ஆனால், இரு கட்டிடங்களும் ஒன்றோடொன்று தொடர்பாக இருந்திருக்கின்றன. மிகப் பெரிய வளைவான வாயிலொன்று இரு கட்டிடங்களையும் இணைத்திருந்திருக்கிறது.

தேவாலயத்தின் முகப்பு நெடிதாக உயர்ந்து சென்று உச்சியில் நான்கு தூண்களாலான சிறிய கூண்டுடன் முடிகின்றது. இத்தகைய முகப்பு அமைப்புள்ள தேவாலயம் யாழ்ப்பாணத்தில் எங்குமே இப்பொழுது இல்லை என்று துணிந்து கூறலாம். ஆனால் தேவாலயத்தின் அடிப்பாகங்கள் பலமான முருகைக் கற்களாற் கட்டப்பட்டிருக்கையில், முகப்பு மட்டும் காட்டுக் கற்களாலும், கடற்கரைக் கற்களாலும் கட்டப்பட்டுச் செம்மையற்ற அவசர வேலைப்பாடாகக் காட்சியளிக்கின்றது. முகப்பின் உச்சியில் காற்றின் திசையைக் காட்டுவதற்காக இரும்புத் தகட்டாலான மீன் வடிவம் பொருத்தப்பட்டிருந்தது. அது சமீபத்தில் கீழே விழுந்துவிட்டது என்று அறிந்தேன்.

இப்பொழுது காணப்படுகின்ற நுழைவாயில் ஆரம்பகாலத்திலேயே

அமைக்கப்பட்டிருந்ததா என்பது ஆராய்வுக்குரியது. வடக்கு நோக்கிக் காணப்படும் இன்றைய முகப்பு 1672இல் **போல்டேயஸ்** என்பவரால் வெளியிடப்பட்ட நூலில் உள்ள படத்தில் இல்லை. அதில் இத்தேவாலயத்தின் வாயில் மேற்கு நோக்கியே காணப்படுகின்றது. மேலும் மேற்குப்புறமாக வாயில் ஒன்று இருந்தமைக்கான அறிகுறிகளையும் இப்பொழுது காணக்கூடியதாக இருக்கின்றது. தேவாலயம் கிழக்கு மேற்காக நீண்டிருப்பதால் வடக்குப்புற வாயிலிலும் பார்க்கக் மேற்குப்புற வாயிலே பொருத்தமானதாக இருக்கின்றது. ஆனால் வடபுற வாயிலுக்கேற்ப வடக்குத் தெற்காகத் தேவாலயம் விரிவுபடுத்தப்பட்டிருந்தமைக்கான சான்றுகளுமுண்டு.

தேவாலயத்தைச் சார்ந்த இல்லம் (Church House) ஒல்லாந்தப் பாடசாலையாக இருந்திருக்கலாம். 750 மாணவர்களுடன் இப் பாடசாலை இயங்கியதாக போல்டேயஸ் கூறுகின்றார். இது இருமாடிக் கட்டிடம். கீழ் மாடியிற் பெரும் பகுதி, காலத்தின் கோரப்பிடியில் அகப்பட்டு மண்மேட்டினால் மூடப்பட்டுவிட்டது. கீழ்த் தளத்தில் வளைவான மூன்று வாயில்கள் இருந்திருக்கின்றன. இது போல்டேயஸின் படத்தாலும் உறுதிப்படுத்தப்படுகின்றது. இம் மூன்று வாயில்களும் பாதிக்குமேல் மண்ணுள் ஆழ்ந்துவிட்டன. எஞ்சிய துவாரங்களையும் பிற்காலத்தில் யாரோ கற்களைப் போட்டு மூடி அடைத்துவிட்டார்கள். மேல் தளத்திற்குப் போவதற்கான படிக்கட்டு வெளிப்புறமாகச் சிதைந்தநிலையிற் காணப்படுகின்றது. இப் படிக்கட்டுகளும் போல்டேயஸின் படத்திற் காட்டப்பட்டுள்ளன. மேல் தளத்தில் ஒரேயொரு வாசல் மட்டுமே இப்பொழுது காணப்படுகின்றது. ஏனையவை இடிந்துபோயிருக்கலாம். சுவர்கள் மிகப் பலமாகவும், அகலமானவையாகவும் உள்ளன. சுவர்களின் உட்புறத்தில் 'பிறைமாடங்கள்' உண்டு. வீட்டின் பின்புறத்தில் முருகைக் கற்களாற் கட்டப்பட்ட பழைமையான கிணறும் உள்ளது. தேவாலயத்தின் தெற்குப்புறத்திலும், தேவாலய இல்லத்திலும் நீண்ட விருந்தைகள் இருந்திருக்கின்றன. விருந்தைக் கட்டிட அமைப்புமுறை, அச் சொற்பிரயோகம் என்பன ஒல்லாந்தரால் அறிமுகப்படுத்தப்பட்டவையே. மொத்தத்தில் ஒல்லாந்தக் கட்டடக்கலைக்கு இத் தேவாலயம் நல்ல சான்று.

போர்த்துக்கீசர் வருகைக்கு முன்பே இப் பகுதி சிறப்புடன் விளங்கியிருக்கிறது. யாழ்ப்பாணத்தரசர் காலக் கட்டிடங்கள் இங்கிருந்திருக்கின்றன. இப்பொழுதும் தேவாலயத்திற்கு எதிராக உள்ள வீதியின் மறுபுறத்தில் **தொண்டைமான் குளம்** என்று அழைக்கப்படும் குளமொன்று மிகப் பழைமையான முருகைக்கல் விளிம்புக் கட்டுடன் காணப்படுகின்றது. குளம் தூர்ந்து கொண்டேவருகிறது. ஒரு பக்கக் கட்டு முற்றாகச் சிதைந்துவிட்டது. குளம் எண்ணூறு ஆண்டுகளுக்கு

மேல் பழைமையானது என்று கூறலாம். (தொண்டைமான் என்ற பெயரே யாழ்ப்பாண அரசர் காலத்திற்குமுன் செல்கின்றது. சோழ அரசர்கள் இலங்கையை ஆண்ட பொழுது கி. பி. 10ஆம், 11ஆம், நூற்றாண்டுகளில் கருணாகரத் தொண்டைமான் என்பவர் கீரிமலையில் வந்திறங்கி உப்பு ஏற்றுமதிக்காகத் தொண்டைமான் ஆற்றை வெட்டுவித்தார் என்பது யாழ்ப்பாண வைபவமாலை கூறும் செய்தி. உரும்பராயில் பழம்பெருமை வாய்ந்த கருணாகரப் பிள்ளையார் கோவில் இருப்பதும் குறிப்பிடத் தக்கது.)

குளக்கரையில் கண்ணகி கோவிலொன்று பழைய காலந் தொட்டே இருந்ததாக ஊரவர்கள் கூறினார்கள். சிலசமயம் இதுவும் தொண்டைமானால் கட்டப்பட்டிருக்கலாம். இங்கிருந்த கண்ணகி சிலை, சிலம்பு என்பன பின்னர் கடற்கரையிற் புதிதாகக் கட்டப்பட்ட கண்ணகி கோவிலுக்குக் கொண்டுசெல்லப்பட்டுவிட்டதாகக் கூறினார்கள். இப்பொழுதும் பழைய கோவிலின் நினைவாகக் குளக்கரையில் சிலை இல்லாத சிறு ஆலயம் ஒன்று இருக்கின்றது. தென்புலத்தார் வழிபாட்டில் கண்ணகி வழிபாடு மிகப் பழைமையானதென்பதும் கடல் வணிகர்களாற் கண்ணகி குலதெய்வமாக வழிபடப்பட்டாளென்பதும் குறிப்பிடத்தக்கன. இக் கண்ணகி ஆலயமும், தொண்டைமான் குளமும் இப் பகுதிக்குப் பழைய பெருமையைக் கொடுக்கின்றன. மேலும் இங்கு வந்த போர்த்துக்கீசர் இந்துக் கோயில்களை இடித்து அதற்கு அருகில் தமது தேவாலயங்களைக் கட்டினார்களென்பது வரலாறு கூறும் உண்மையாதலின் இந்த இடத்தில் தேவாலயம் கட்டப்பட்டிருப்பதும் பொருத்தமானதே.

இந்த இடத்தில் தேவாலயம் ஒன்று முதன்முதல் யாரால் எக் காலத்திற் கட்டப்பட்டது என்பது சிக்கலான கேள்வி. ஆரம்பத்தில் கத்தோலிக்கத் தேவாலயமாகப் போர்த்துக்கீசராற் கட்டப்பட்டுப் பின்னர் ஒல்லாந்தரால் திருத்தப் பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. ஆனால், ஊரவர்களின் கர்ணபரம்பரைக் கதைகளைத் தவிர வேறு உறுதியான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. போர்த்துக்கீசர்கால யாழ்ப்பாணம் ஆரம்பத்தில் பிரான்சிஸ்கன் குருமாரினதும் பின்னர் இயேசுசபைக் குருமாரினதும் மதமாற்றத்திற்கு இலக்காகியது. இயேசுசபைக் குருமார்களே கூடுதலாக யாழ்ப்பாணமெங்கும் கத்தோலிக்கத் தேவாலயங்களைக் கட்டினார்கள். கடல் தொழிலாளர் வாழ்கின்ற பகுதியில் அவர்கள் கூடுதலாக அக்கறை காட்டினார்கள்.

யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கீசர் முற்றாகக் கைப்பற்றமுன் **நூனஸ்** என்ற இயேசுசபைக் குரு யாழ்ப்பாணத்தில் மதமாற்றம் பற்றி எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி :

"Having spoken of the fishery, I must not omit to say some-

thing about Jaffnapatao. The Viceroy Don Constantine went there and captured the Country ; four thousand or more were made Christians, but peace was afterwards made without the least regard to the converts. These Christians are still in Jaffnapatao............

This seems a good reason to complete the conquest of that country......... and we shall be able to place there all the Christians of fishery.........."[1]

யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கீசர் முற்றுகக் கைப்பற்ற முன்பே கரையோரப் பகுதிகளில் மதமாற்றத்தைத் தொடங்கிவிட்டார்கள் என்பதை இக் கடிதப்பகுதி கூறுகின்றது. எனவே மயிலிட்டிப் பகுதியில் போர்த்துக்கீசர் அக்கறை செலுத்தி இருந்தால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. மேலும் தற்போதுள்ள தேவாலயத்தில் நான்கு ஒடுக்கமான வளைவு யன்னல்கள் இருப்பதும் போர்த்துக்கீசக் கட்டிடக்கலைச் சாயல் என்று கருதப்படுகின்றது.

ஆனல் போர்த்துக்கீசத் தேவாலயம் இருந்ததற்கான நேரடிச் சான்றுகள் எதுவும் இப்பொழுது கிடைக்கவில்லை. தெல்லிப்பழை, மல்லாகம் முதலிய இடங்களிலுள்ள தேவாலயங்கள் போர்த்துக்கீசரால் கட்டப்பட்டு ஒல்லாந்தரால் திருத்தப்பட்டதாக போல்டேயஸ் கூறுகின்ருர். ஆனல் இவற்றை அடுத்து அவர் குறிப்பிடும் மயிலிட்டித் தேவாலயத்தைப்பற்றி இத்தகைய குறிப்புகள் எதுவுமில்லை. இதே நேரத்தில் மயிலிட்டித் தேவாலயத்தின் படம் போல்டேயஸால் வரையப்பட்டுள்ளது. எனவே இத் தேவாலயம் 1665க்கு முன் பூர்த்தியாகியிருக்கவேண்டும். 1658இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் 1665க்கு இடையில் இவ்வளவு பெரிய தேவாலயத்தைக் கட்டியிருப்பார்களென்பதும் ஐயத்திற்குரியதே. எனவே போர்த்துக்கீசர் கட்டிய தேவாலயத்தையே ஒல்லாந்தர் திருத்திஞர்கள் என்று கொள்ளவும் இடமுண்டு என்பர் ஒருசாரார்.

இத் தேவாலயத்தைப்பற்றிய தெளிவான நேரடியான குறிப்பு போல்டேயஸாலேயே கூறப்படுகிறது. பிலிப்ஸ் போல்டேயஸ் (Phillipus Baldaeus) என்பவர் ஒல்லாந்த மதகுரு. 1658இல் ஒல்லாந்தப் படைகள் **ரைசிளப்வான்கோயன்ஸின்** தலைமையில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வந்தபொழுது அவர்களுடன் இவரும் வந்தார். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய உடனேயே யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் மதமாற்றத்திற்குப் பொறுப்பாக போல்டேயஸ் நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணத்திலுள்ள போர்த்துக்கீச ஆலயங்களும், பாடசாலைகளும் இவரால் பொறுப்பேற்கப்பட்டுத் **திருத்தப்பட்ட டச்சுமத** ஆலயங்களாகவும், ஒல்லாந்தப் பாடசாலை

1— A History of the Catholic Church in Ceylon — Rev. S. GNANAPRAKASAR, P. 209

களாகவும் மாற்றப்பட்டன. அப்போதிருந்த டச்சுத் தேசாதிபதியாகிய **யோன் மட்சூய்கரின்** முழு ஆதரவும் இவருக்குக் கிடைத்தது. 1658 முதல் 1665 வரை எட்டு ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் சேவை செய்தபொழுது குடாநாட்டின் பல பகுதிகளையும் பார்வையிட்டு ஆங்காங்கு தேவாலயங்களைப் புதுக்கியும், புதிதாகவும் அமைத்தார். 1665ல் ஒல்லாந்து தேசம் திரும்பிய அவர் தமது நினைவுகளை 1672இல் நூல் வடிவில் வெளியிட்டார். இந்நாலில் பெரும்பகுதி யாழ்ப்பாணத்தைப் பற்றியே குறிப்பிடுகின்றது. யாழ்ப்பாணத்தில் அக் காலத்திலிருந்த தேவாலயங்களின் படங்கள் (மயிலிட்டி உட்பட) இதில் வரையப்பட்டுள்ளன. மயிலிட்டித் தேவாலயம் இவரின் மேற்பார்வையிலேயே திருத்தப்பட்டது அல்லது கட்டப்பட்டது என்பது உறுதி. மயிலிட்டித் தேவாலயத்தையும் அதில் நடைபெற்றுவந்த ஒல்லாந்தப் பாடசாலையையும் பற்றி அவர் மேல்வருமாறு கூறுகின்றார்:

"The church of Mayletti lies full one and quarter hours march from the principal church Telepole. Here there is a very respectable school Comprising 750 children far advanced in knowledge with a clever school master. Who single handed does much more than the two who preside over the school of Telepole. Here there is Congregatian of 1500 to 1600 persons very attentive and far exceeding the others. The church is built of good coral stones and is wide and roomy. The house attached to it, is very lofty with a flat roof extending over the choir of the church, affording a fine prospect of sea and land. might well be designated Bell Videre or Boa Vista; the Church is not above a half or quarter hours distance from the seashore. We have here plenty of fish, soles, plaice, crabs etc. The place abounds also in hare and partridges".

போல்டேயஸ் காலத்தில் மயிலிட்டி ஒல்லாந்தப் பாடசாலை அறிவாற்றலுள்ள 750 மாணவர்களுடனும், திறமையான ஆசிரியருடனும் இயங்கியது என்பது மேலே கூறப்பட்டுள்ளது.

ஒல்லாந்தர் காலத்திலேயே மேலும் பல திருத்தங்கள் இத்தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். இச் சூழல் ஒல்லாந்தர் காலத்தில் கடல் வர்த்தகத்திலும் சிறப்புற்று இருந்திருக்கின்றது. தேவாலய வளவில் கண்டெடுக்கப்பட்ட திருவனந்தபுர நாணயமும், வீரமாணிக்கத்தேவன் துறை, பெரியநாட்டுத்தேவன் துறை என்ற துறைகளின் பெயர்களும் பிற்காலத்தில் தென்னிந்தியக் கரைகளோடு நடைபெற்றுவந்த வர்த்தகத்திற்கு நல்ல சான்றுகள்.

இத் தேவாலயம் பிற்காலத்திற் கைவிடப்பட்டு இன்று பாழடைந்து இருக்கக் காரணம் என்ன? ஒல்லாந்தரால் இங்கு புகுத்தப்பட்ட **புனரமைக்கப்பட்ட டச்சுமதம்** (Reformed Dutch Religion) காலகதியில் செல்வாக்கு இழக்கத்தொடங்கிவிட்டது. ஒல்லாந்தர் **கல்வி**

னுடைய கோட்பாடுகளைப் பின் பற்றியவர். கல்வினுடைய மதம் கிழக்கு நாடுகளுக்கு ஏற்றதாக இருக்கவில்லை. கல்வினுடைய கொள்கைகளைச் சுதேச மக்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஆனால் கத்தோலிக்க மதமோ பௌத்த, இந்து மதங்களைப்போன்று பொது மக்களால் நடைமுறையில் அநுசரிக்கக்கூடிய மதமாக இருந்தது. கத்தோலிக்கக் குருமாருக்கு இருந்த உழைப்பும், உறுதியும், மதப் பற்றும் டச்சுக் குருமாருக்கு இருக்கவில்லை. டச்சுக் குருமார் சம்பளத்திற்காக உழைத்தனர். டச்சு மதத்திற்கு மாறியவர்களும் அதற்கு விசுவாசமாக இருக்கவில்லை. இதைவிட இலங்கையிலிருந்த டச்சுத் தேவாலயத்திற்கும் டச்சு அரசாங்கத்திற்கும் இடையில் பிணக்குகள் நெடுங்காலமாக இருந்துவந்தன. தேவாலயங்களும் பாடசாலைகளும் டச்சு அரசாங்கத்தின் அங்கமாக இருத்தல்வேண்டுமென்று டச்சுக் கொம்பனி கருதியபோது குருமார்கள் அவை தனித்தியங்கவேண்டும் என்றனர். இவ்வாறான பல காரணங்களால் ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றியதும் டச்சு மதமும் டச்சுத் தேவாலயங்களும் மறையத்தொடங்கிவிட்டன. ஓரிரு தேவாலயங்களைத் தவிர ஏனையவை அங்கிலிக்கன், வெஸ்லியன், மெதடிஸ்ட், அமெரிக்கன் மிஷன் தேவாலயங்களாக மாறிவிட்டன. சில கைவிடப்பட்டுவிட்டன. எனது ஊகத்தின்படி மயிலிட்டித் தேவாலயம் 1800 அளவில் கைவிடப்பட்டு இருக்கலாம். (1796 அளவில் ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றினர்). ஏனோ இதனைப் புனரமைக்க அக்காலத்தில் எந்த மிஷனும் முயற்சியெடுக்கவில்லை.

1816இல் தெல்லிப்பழையில் குடியேறிய அமெரிக்கன் மிஷன் பிற்காலத்தில் மயிலிட்டித் தேவாலயத்தைப் பொறுப்பேற்று அங்கு ஒரு கொட்டிற் பாடசாலையை அமைத்தது. ஆனால் அவர்களும் தேவாலயத்தைத் திருத்தவில்லை. அமெரிக்கன்மிஷன் மயிலிட்டிக்கு வந்தபொழுது தேவாலயம் திருத்த முடியாத அளவு பாழடைந்திருக்கலாம்.

இதற்குப் பேய்க் கோவில் என்ற பெயர் வழங்குவதற்குரிய காரணம் சிந்திக்கற்பாலது. நெடுங்காலமாகப் பாழடைந்திருந்ததால் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். அல்லது **பேக்** என்ற பெயர் உடையவர் இக் கோவிலோடு தொடர்புடையவராய் இருந்திருக்கலாம் என்று கூறுவர். ஆனால் உண்மையில் மதம் மாருத சுதேசிகள் வைத்த பெயரே இதுவாகும். மதம்மாறிய கிறிஸ்தவர்கள் சைவர்களைச் சாத்தானின் பிள்ளைகளென்றும், இந்துக் கோயில்களைச் சாத்தானின் கோயில்களென்றும் கூறியதால், சைவர்கள் கிறிஸ்தவர்களைப் பேயின் பிள்ளைகள் என்றும், அவர்களது தேவாலயங்களைப் பேய்க்கோயிலென்றும் அழைத்தனர். பிதா, சுதன், துயஆவி (Holy Ghost) என்பன கிறிஸ்தவர்களின் திரித்துவமாகும் 'Ghost' என்ற சொல்லுக்கு ஆவி, பேய் என்னும் பொருள்கள் உள. இக் கருத்தில் இது பேய்க்கோயில் என வழங்கப்பட்டிருக்கலாம்.

தூய்மையான டச்சுக் கட்டடக் கலையை வெளிப்படுத்தி நிற்கும் மயிலிட்டித்தேவாலயம் அகழ்வு ஆராய்ச்சி செய்யவேண்டியது. மண்மேடிட்டுள்ள பகுதிகளை அகழ்வதன் மூலம் புதிய சான்றுகள் வெளியாகலாம்.

*(இத் தேவாலயத்தைப் பார்வையிட்டு வேண்டிய கருத்துரைகள் கூறி உதவிய யாழ். தொல்பொருள் நிலைய அதிபர் திரு. ம. பொ. செல்வரத்தினம் அவர்களுக்கு எனது நன்றி.)*

# கலா மன்றம்

புரவலர் : அதிபர் அவர்கள்

துணைப் புரவலர் : திரு. நா. கருணானந்தசிவம்

தலைமைப் பொருளாளர் : திரு. வை. இரத்தினம்

தலைவர் : செல்வி எ. இலட்சுமி. செயலாளர் : செல்வி செ. சுசீலா.

செயலாளர் : செல்வி மா. விமலராணி. துணைச் செயலாளர்: செல்வி சோ. அன்னலட்சுமி.

செயற்குழு உறுப்பினர் :

செல்வி க. உதயதாரகை. செல்வன் வே. இராசசேகரன்.

ஆண்டுகள் பலவாக அடிமைத்தளையிற் பிணிப்புண்டிருந்து விடுதலைபெற்ற நம் நாட்டில் கலை, கலாச்சாரத் துறைகளில் மறுமலர்ச்சி உருவாகி வருகின்றது. அந்த மறுமலர்ச்சியின் பிரதிபலிப்பே 'பாடசாலைகள்தோறும் கலா மன்றங்கள் அமைக்கப்படவேண்டும்' என்ற கல்வித் திணைக்களத்தின் பணிப்புரை. இப் பணிப்புரைக்கமைய, முந்நூறு ஆண்டுகள் முதிர்ந்த வரலாறு படைத்த எமது பாடசாலையிலும் கடந்த சனவரித் திங்கள் பதினெட்டாம் நாள் (1974 - 01 - 18) கலா மன்றம் கருவாகி, உருவாகிக் கவினுடைக் குழவியாய்த் தவழ்ந்து இன்று குறுநடை பயில்கிறது. குறுநடை பயில்கின்ற வேளையிலும் இக் குழவி பல சாதனைகளை நிகழ்த்தி வருகின்றது என்பதைக் கூறிக்கொள்வதில் பெருமையடைகிறேன்.

கடந்த ஒன்பது மாதங்களிலும் மன்றம் குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றியுள்ளது. கண்ணகியின் சீற்றத்தைக் கருவாகக் கொண்ட "கற்புக்கனல்"; தமிழோடிசை பாட மறந்தறியா நாவுக்கரசரின் வரலாற்றை அடிப்படையாகக்கொண்ட "அருளுடை அப்பர்"; தொழிலின் மகத்துவத்தை உணர்த்தி, நாகரிக மோகத்தைச் சாடும் "காற்சட்டைக் கல்யாணம்" ஆகிய நற்றமிழ் நாடகங்கள் இக் குறுகிய காலத்தில் மன்றத்தின் படைப்புக்களாகும். நான்காவது படைப்பாக "திருவடித் தாமரை" எனும் நாடகம் உருவாகிக்கொண்டிருக்கிறது.

உருவிலும், வயதிலும் இளையவரான எமது மன்ற உறுப்பினர் பட்டை தீட்டப்படாத வைரங்களாக இருக்கின்றனர். அந்த வைரங்களைப் பட்டைதீட்டி ஒளிவீசச் செய்யும் பணியிலே மன்றம் ஈடுபட்டிருக்கின்றது. நாடகத்துறையில் மட்டுமன்றி நடனம், இசை ஆகிய துறைகளிலும் தம் மாணவர் திறனை வளர்க்க மன்றம் அயராது பணியாற்றுகின்றது. பல நடன நிகழ்ச்சிகளைப் பாடசாலையிலும், சிவராத்திரி விழாப் போன்ற பொது நிகழ்ச்சிகளிலும், மன்றம் உருவாக்கி அளித்துள்ளது. பேச்சுக் கலை, எழுத்துக்கலை முதலியவற்றிலும் மாணவர்களை நமது மன்றம் ஈடுபடுத்தி வருகின்றது. மன்றத்தின் புரவலர், துணைப்புரவலர், மற்றும் ஆசிரியர்கள் மன்றத்தின் ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஊக்கந் தந்து அதன் வளர்ச்சிக்கு ஆதாரமாயமைகின்றனர்.

கலைப்பணியே மன்றத்தின் தலைப்பணியாகும்.

செ. சுசீலா
செயலாளர்

# உடை அமைத்தற் கழகம்

புரவலர் : அதிபர் அவர்கள்
துணைப் புரவலர் : திருமதி பி. அன்ரனிசாமி
,, யோ. இராசரத்தினம்
தலைவர் : செல்வி சி. பன்னீர்ச்செல்வி
செயலாளர் : ,, க. உதயதாரகை
பொருளாளர் : ,, வி. சோதிசொரூபம்

உடையமைத்தற் கழகம், 1974ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் ஆசிரியர்கள் திருமதி பி. அன்ரனிசாமி, திருமதி யோ. இராசரத்தினம் அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

எமது கலாச்சாரத்திற்கேற்ப உடைகளை அழகாகவும் சிக்கனத்துடனும் அமைப்பதற்கு இக் கழகம் உதவுவதாய் அமைகிறது. அன்றியும் எதிர்காலத்திற் சுகாதாரத்திற்கேற்ப உடைகளை அமைக்குமாற்றையும், பேணும் வகையினையும் இக் கழகம் அறிவுறுத்துகின்றது.

எமது கழக உறுப்பினர் கல்வித் திணைக்களம் நடாத்திய பொருட்காட்சிகளிற் பங்குபற்றித் தம் திறமையை வெளிப்படுத்திப் பாராட்டும் பெற்றனர்.

1975ஆம் ஆண்டு முற்பகுதியில் எமது வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள பொருட்காட்சியில் எமது கழகமும் கலந்துகொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

க. உதயதாரகை
செயலாளர்

# சமூகக் கல்விக் கழகம்

புரவலர் : அதிபர் அவர்கள்
துணைப் புரவலர் : திரு. இ. செல்லத்துரை
திருமதி யோ. இராசரத்தினம்
தலைவர் : செல்வன் ச. ஜெயமோகன்
செயலாளர் : செல்வன் இ. கிருஷ்ணவசீகரன்
பொருளாளர் : செல்வன் சி. ஆனந்தசிங்கம்

1974ஆம் ஆண்டின் ஆரம்பத்திற் சமூகக் கல்விக் கழகம் என்னும் குழவி தோன்றியது. சூழலை அறிதல், பயன்படுத்துதல் என்பன போன்ற நோக்குகளை இலக்காகக் கொண்ட எமது கழகம் மாதமொருமுறை கூடி இவற்றை அடைவதற்கு நாம் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்திக்கின்றது. அத்துடன் கருத்தரங்குகளையும் நடாத்தி மாணவர்களைச் சுயமாகச் சிந்திக்கவும் இயங்கவும் வைக்கின்றது.

எமது மன்றம் கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டு யாழ் குடாநாட்டின் பல்வேறிடங்களையும் அங்கத்தவர்கள் பார்வையிட ஒழுங்கு செய்தது. எமது கிராமப் பகுதிகளை - அங்குவாழும் மக்களை - அவர்கள் முயற்சிகளை - வளர்க்கப்படும் மிருகங்களை - பறவைகளை - வளரும் பயிரினங்களை - கடற்றொழில் பற்றிய செய்திகளை - நாம் உணர எமது மன்றம் வழிகாட்டியது.

அடுத்துவருமாண்டின் முற்பகுதியில் நடைபெறவுள்ள பொருட்காட்சியின்போது எம் மன்றம் தன் தொழிற்பாடுகளை எல்லோருக்கும் அறிமுகம் செய்யும் பணியில் இப்பொழுதிருந்தே முயற்சித்து வருகின்றதென்பதை மகிழ்வுடனும் பெருமையுடனும் சொல்லிவைக்க விரும்புகின்றோம்.

இ. கிருஷ்ணவசீகரன்
செயலாளர்

# பனந்தொழில் விருத்தி மன்றம்

| | |
|---|---|
| புரவலர் : | அதிபர் அவர்கள் |
| துணைப் புரவலர் : | திருமதி சி. சின்னையா |
| தலைவர் : | செல்வன் சி. மாதவன் |
| செயலாளர் : | செல்வி து. கமலலோஜினி |
| பொருளாளர் : | செல்வி இ. மகேந்திரராணி |

உப உணவுப் பொருள்களைப் பலவாக்கிக் காண்பிப்பது, நாளாந்த பாவனைப் பொருள்களை உள்ளூர் மயமாக்குவது போன்ற இலக்குகளைக் கருத்திற் கொண்டு இயங்குவது பனந்தொழில் விருத்தி மன்றம். இந்த ஆண்டின் ஆரம்பத்திலே தோன்றிய பச்சிளங்குழவி நம் மன்றம். எனினும் நல்ல பல சாதனைகளை இக் குறுகிய காலத்துள்ளேயே நிலைநாட்டிய பெருமையும் இதற்குண்டு.

பாணி தயாரித்தல், பனங்கட்டி தயார் செய்தல், பனங் கற்கண்டு விளையும் வகை செய்தல், பனாட்டுச் செய்தல், அதனை இன்சுவை உணவாக அமைத்தல், ஒடியலிற் பல்வகைப் பயன் காணல் போன்ற முயற்சிகளை எம்மன்ற உறுப்பினர்கள் மேற்கொண்டு பயன்கண்டுள்ளனர். பலவினப் பெட்டிகள் உருவாக்கல், நீற்றுப் பெட்டி, பாய், பட்டை, விளையாட்டுப் பொருள்கள் போன்றவற்றைச் செய்தல் முதலான முயற்சிகளிலும் நமது மன்ற உறுப்பினர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். 1975ஆம் ஆண்டு எமது வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள கண்காட்சியில் இடம் பெறவுள்ள எமது மன்ற வேலைப்பகுதி பார்வையாளர்களின் கண்களுக்கு நல்லதொரு விருந்தாக அமையுமென்பதை இப்பொழுதே கூறிவைக்க விரும்புகின்றேன்.

து. கமலலோஜினி
செயலாளர்

---

# தமிழ் மன்றம்

| | |
|---|---|
| புரவலர் : | அதிபர் அவர்கள் |
| துணைப் புரவலர் : | திரு. சு. சின்னத்தம்பி |
| தலைவர் : | செல்வன் சோ. பரமநாதன் |
| செயலாளர் : | செல்வி வ. சரோஜினிதேவி |

கடந்த 1972ஆம் ஆண்டில் உருவாயது எமது தமிழ் மன்றம். திரு. கு. கந்தையா, திரு. தி. இரத்தினம், திரு. வை. இரத்தினம், திரு. சி. சின்னையா என்போர் எம் மன்றத்தின் முன்னைநாள் துணைப் புரவலர்களாகப் பணியாற்றியுள்ளனர். அவர்கள் எம் மன்ற வளர்ச்சிக்கு ஆற்றிய சேவையை யாம் என்றும் மறக்கமுடியாது.

எமது மன்றம் மாதம் ஒருமுறை பொதுக்கூட்டம் நடாத்துகின்றது. அத்துடன் வள்ளுவர், பாரதி, நாவலர், விபுலானந்தர் போன்ற பெரியார்களது நினைவாகவும்

அவ்வக்காலங்களில் விழாவெடுக்கின்றது. கடந்த இரு ஆண்டுகளிலும், திருக்குறள் மனனப் போட்டியை நடைபெறச் செய்து வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களைப் பரிசில்களாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அரசினரால் அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டியை இல்லங்களுக்கிடையிலான போட்டியாக எமது மன்றம் கடந்த இரு ஆண்டுகளிலும் நடாத்திப் பெரும் பயன் கண்டது. எமது மன்ற வளர்ச்சிக்குப் பேருழைப்பு நல்கும் அதிபர், ஆசிரியர்கள், உறுப்பினர்கள் அனைவர்க்கும் எமது உளங்கனிந்த நன்றியினைச் சமர்ப்பித்துக்கொள்ளுகிறோம்.

வ. சரோஜினிதேவி
செயலாளர்

---

# விவசாயக் கழகம்

| | |
|---|---|
| புரவலர் : | அதிபர் அவர்கள் |
| துணைப் புரவலர் : | திரு. த. இராசரத்தினம் |
| தலைமைப் பொருளாளர் : | திரு. இ. செல்லத்துரை |
| தலைவர் : | செல்வன் சு. கனகரத்தினம் |
| செயலாளர் : | ,, மு. அருமைராசா |
| பொருளாளர் : | ,, ச. ஜெயமோகன் |

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி காரணமாக உணவு உற்பத்தியில் எங்கும் ஆர்வம் கொழுந்துவிட்டெரிகிறது. மாணவர்களிடமும் இவ்வார்வம் பரவியுள்ளது. இவ்வார்வத்திற்குச் செயலுருவம் கொடுத்துப் பயன் விளையச் செய்வதற்காக 1973ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் விவசாயக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. திரு. த. இராசரத்தினம் அவர்கள் கழகத்தின் துணைப் புரவலராக இருந்து சிறப்பாக வழிநடத்தி வருகிறார். திரு. இ. செல்லத்துரை அவர்கள் கழக வருவாயைப் பாதுகாத்து வருகிறார்.

எமது கழக உறுப்பினர்கள் இவ்வாண்டில் மரவள்ளி, தக்காளி, வெண்டி ஆகியவற்றைப் பயிரிட்டு அதிக விளைவைப் பெற்றனர். வெங்காயச் செய்கையில் நாம் போதிய வெற்றிபெற முடியவில்லை.

விவசாயம் செய்யக்கூடியதாகப் 15 பரப்பு நிலம் எமது பாடசாலைக்குச் சொந்தமாக இருந்தும் வேலியற்ற காரணத்தாற் பயிரிடமுடியாத நிலையிலுள்ளோம். விரைவில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமென நம்புகிறோம்.

மு. அருமைராசா
செயலாளர்


---

# சேரன் இல்லம்

| | |
|---|---|
| புரவலர் : | அதிபர் அவர்கள் |
| துணைப் புரவலர் : | திரு. த. இராசரத்தினம் |
| | திருமதி சி. சின்னையா |
| | திரு. சி. சிவகுமாரன் |
| இல்லத் தலைவர் : | செல்வி சி. பிள்ளை |
| மெய்வல்லுநர் தலைவர் : | செல்வி செ. சுசிலா |

கல்வித்துறையிலே ஒரு பாடசாலை ஈட்டுகின்ற சாதனைகளோடு, புறவேலைகளில் அது காட்டுகின்ற ஆர்வமும், நாட்டுகின்ற வெற்றிகளுமே அப்பாடசாலையின் வளர்ச்சி

## சேரன் இல்லம்



1972, 1973இல் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம்

யைக் காட்டி நிற்கும் அளவுகோல்களாகும். இத்துறையில் செந்நிறத்தைத் தன் கொடியாகக் கொண்ட சேரன் இல்லம் பாடசாலைக்குத் தன் பங்கைச் சிறப்புறச் செலுத்தியுள்ளது.

இல்ல உறுப்பினர்கள், விளையாட்டுக் களத்திலே கடைப்பிடிக்க வேண்டிய கண்ணியம், கட்டுப்பாடு, பொறுமையுணர்வு அத்தனையும் உரியவர்களாகப் பயிற்சிபெற்றுத் தமது இல்லத்தின் வெற்றிக்குத் துணையாயமைந்தனர். 1972ஆம், 1973ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் தொடர்ந்து முதலிடத்தைப் பெற்று வெற்றிக் கேடயத்தை எமது இல்லத்தினர் சுவீகரித்துக்கொண்டனர். 1972இல் எமது இல்லத்தைச் சேர்ந்த செல்வி செ. சுசீலா கீழ்ப்பிரிவு (பெண்) விருதாளராகவும், செல்வன் ச. தர்மலிங்கம் மத்திய பிரிவு (ஆண்) விருதாளராகவும், 1973இல் செல்வி அ. றெஜினு, செல்வன் மா. பிரேமானந்தம் ஆகியோர் முறையே, பாலர் பிரிவு, மத்திய பிரிவு விருதாளராகவும் வெற்றிபெற்று எமது இல்லத்திற்குப் பெருமை சேர்த்தனர்.

காங்கேசன்துறைக் கல்வி வட்டார விளையாட்டுப் போட்டியில் எமது இல்லத்தைச் சேர்ந்த செல்வி செ. சுசீலா குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை தேடித் தந்தமையை ஈண்டு குறிப்பிடுவதில் பெருமையடைகிறேன். இத்தகு வெற்றிகளுக்குத் துணைநின்ற மாணவர்களும், ஆசிரியர்களும் இல்லத்தின் பாராட்டுக்குரியவராவர்.

சி. பிள்ளை
இல்லத் தலைவர்

---

# பாண்டியன் இல்லம்

| | |
|---|---|
| புரவலர் : | அதிபர் அவர்கள் |
| துணைப் புரவலர் : | திரு. வை. இரத்தினம் |
| | திரு. சு. சின்னத்தம்பி |
| | திருமதி பி. அன்ரனிசாமி |
| இல்லத் தலைவர் : | செல்வி சோ. அன்னலட்சுமி |
| மெய்வல்லுநர் தலைவர் ; | செல்வன் வே. இராசசேகரன் |

ஒழுக்கமும், உறுதியும், கட்டுப்பாடும் மிக்க மாணவர் சமுதாயத்தை எமது பாடசாலையில் உருவாக்குவதில் கடந்த காலங்களில் பாண்டியன் இல்லம் தனது பங்கைச் சிறப்புற ஆற்றியுள்ளது; எதிர்காலத்திலும் ஆற்றும் என உறுதியாக நம்பலாம்.

விளையாட்டுத்துறையை இத்தகைய சீரிய குணங்களின் பயிற்சிக்களமாகக் கருதி நமது இல்லம் பணியாற்றியுள்ளது. எமது இல்ல மாணவர்களிடையே காணப்படும் ஆர்வமே அது பல வெற்றிகளைப் படைக்க உதவிற்று. இத்துறையில் பொறுப்பாசிரியர்களின் பணியும் பாராட்டற்குரியது. 1972இல் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கீழ்ப்பிரிவு ஆண்களுக்குரிய விருதை எமது இல்லத்தைச் சேர்ந்த செல்வன் சு. தில்லைராசா பெற்றுக்கொண்டார். 1973இல் எமது இல்லத்தைப் பொறுத்தவரை இவ்விருதுகளின் வரிசை நீளமாயிற்று இது இல்ல வளர்ச்சிக்கோர் எடுத்துக்காட்டாகும். 1973இல் பாலர் பிரிவு (ஆண்), கீழ்ப்பிரிவு (பெண்), மத்திய பிரிவு (பெண்), மேற்பிரிவு (பெண்) ஆகியவற்றில் சிறந்த வீரர்க்கான விருதுகளை முறையே எம் இல்

லத்தவர்களான செல்வன் வி. விஜயராசா, செல்வி இ. நிரஞ்சனி, செல்வி செ. பார்வதியம்மா, செல்வி வ. சரோஜினிதேவி ஆகியோர் வென்றெடுத்து இல்லத்துக்குப் பெருமை தேடித் தந்தனர்.

இத்தகைய வெற்றிகளை எமது இல்லம் பெறுதற்குப் பேரார்வமுடன் உழைத்த இல்ல மாணவர்கள், இல்லப் பொறுப்பாசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

சோ. அன்னலட்சுமி
இல்லத் தலைவர்

---

# சோழன் இல்லம்


| | |
|---|---|
| புரவலர் : | அதிபர் அவர்கள் |
| துணைப் புரவலர் : | திரு. ஞா. செபப்பிரகாசம் |
| | திரு. இ. செல்லத்துரை |
| | திருமதி யோ. இராசரத்தினம் |
| இல்லத் தலைவர் : | செல்வன் சி. மாதவன் |
| மெய்வல்லுநர் தலைவர் : | செல்வி எ. இலட்சுமி |

பசுமை, செழிப்பின் அறிகுறி. பச்சை நிறத்தைக் கொடியாகக் கொண்ட சோழன் இல்லமும் பாடசாலையின்வளர்ச்சிக்கு, புறவேலைகளில் தன் செழிப்பான பங்கைச் செலுத்தி வருகின்றது என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். எமது மாணவச் செல்வங்களின் ஆற்றலை வளர்த்தற்கு அருந்துணையாய் நின்ற எமது இல்லத்தின் குறிப்பிடத்தகுந்த வெற்றிகளுக்கு ஊன்றுகோலாய் அமைந்தவர்கள் எமது இல்லப் பொறுப்பாசிரியர்கள்.


விளையாட்டுத்துறையில் நமது இல்ல உறுப்பினர் பேரார்வம் காட்டி வந்துள்ளனர். கீழ்ப்படிவு, ஒற்றுமையுணர்ச்சி என்ற உணர்வுகளின் மொத்த வடிவமாய் எமது உறுப்பினர்கள் செயற்படுகின்றனர். 1972ஆம் ஆண்டில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற எமது இல்லம், 1973ஆம் ஆண்டு ஒரு சில புள்ளிகளால் வெற்றி வாய்ப்பை இழந்தபோதிலும் மாணவர் காட்டிய உணர்ச்சியும் ஆர்வமும் போற்றுதற்குரியன. 1972இல் தனி உறுப்பினர் விருதுகள் எதையும் பெற்றிராத எமது இல்லம் 1973இல் கீழ்ப்பிரிவு ஆண்களுக்குரிய விருதாளர் கிண்ணத்தையும், மேற்பிரிவு ஆண்களுக்கான விருதாளர் சின்னத்தையும் வென்றெடுத்தமை இல்ல வளர்ச்சிக்கோர் எடுத்துக்காட்டாகும். இவ்விருதுகளை முறையே செல்வன் இ. செல்வதாஸ், செல்வன் வ. மகேசநாதன் ஆகிய இருவரும் பெற்றுப் பெருமை சேர்த்தனர். அவர்களுக்கு இல்லத்தின் சார்பில் எனது பாராட்டுக்கள். தொடர்ந்தும் எமது இல்லம் பல்வேறுதுறைகளில் தன்னை வளர்ப்பதோடு, பாடசாலை வளர்ச்சிக்கும் தன் பங்கைச் செலுத்தும் என உறுதியளிக்கிறேன்.

சி. மாதவன்
இல்லத் தலைவர்

பாண்டியன் இல்லம்



சோழன் இல்லம்



# சைவ மாணவர் மன்றம்

| | |
|---|---|
| புரவலர் : | அதிபர் அவர்கள் |
| துணைப் புரவலர் : | திருமதி அ. தம்பையா |
| | ,, யோ. இராசரத்தினம் |
| தலைவர் : | செல்வன் சோ. பரமநாதன் |
| செயலாளர் : | செல்வி அ. யோகாஞ |
| பொருளாளர் : | செல்வன் மா. பிரேமானந்தம் |

எமது மன்றம் 1973ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து சிறப்புடன் பணியாற்றி வருகிறது. புரவலராய அதிபரும், துணைப்புரவலர்களும், மன்ற உறுபினர்களும் மன்ற வளர்ச்சியில் ஆர்வத்துடன் பணியாற்றி வருகின்றனர்.

எமது மன்றம் சமய நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் பொறுப்பாக உள்ளது. ஆண்டுதோறும் நவராத்திரி விழா நடாத்தப்படுகிறது. நால்வர் குருபூசை உரிய காலங்களில் நடைபெறுகின்றன.

வெள்ளிதோறும் மன்ற உறுப்பினர்கள் அயலிலுள்ள ஆலயத்திற்குச் சென்று கூட்டுப் பிரார்த்தனை நிகழ்த்தி வந்தனர். இப்போது பாடசாலையிலேயே இதற்கான வசதி அளிக்கப்பட்டுள்ளது. எமது மன்ற உறுப்பினர் ஊரிலுள்ள ஆலய உற்சவங்களிற் கலந்து வழிபடுதல், நிகழ்ச்சிகளை அளித்தல், கூட்டுப்பிரார்த்தனை செய்தல், சிரமதானம் செய்தல் முதலியவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

சமயம் என்பது கல்வியறிவைப் பெறுவது மட்டுமல்ல; சமய ஒழுக்கங்களைப் பின்பற்றுவதும் சமயப் பாரம்பரியங்களைப் பாதுகாப்பதுமாகும். எமது மன்றம் இக் குறிக்கோளை நிறைவு செய்யும் வகையில் அயராது உழைத்து வருகிறது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

அ. யோகாஞ
செயலாளர்

## தமிழ்க் காதல்

தமிழன் தன் மொழியைக் காதலிப்பதுபோல் வேறெவரும் தம் மொழியைக் காதலிப்பதையோ தமிழ்ப் புலவர் தம் மொழியைப் போற்றுவதுபோல் வேறெவ்விலக்கியத்திலும் யாரேனும் தம் மொழியைப் போற்றுவதையோ கண்டிலேன். சேக்கிழாரை விரித்துப் பார்மின். தமிழ் என்னும் சொல்லைத் தம் செய்யுளில் அமைக்கவேண்டுமெனின் அதற்கு அடையில்லாமல் எழுதப் பின்வாங்குவர். செந்தமிழ், இன்றமிழ், வண்டமிழ், அருந்தமிழ், செழுந்தமிழ், தீந்தமிழ், உயர்தமிழ், கோதில் தமிழ், தேன் பொழியும் செந்தமிழ் என்றெல்லாம் யாழினும் இனிதிசைப்பர். இனி, தேவாரங்களைப் பாடினார் என்னும் பொருளில் தமிழ் பாடியறைந்தார், தமிழ் மாலைகள் சாற்றினார் என்றும் புலவர் கூறுவதை யாம் நினைந்து நினைந்து இன்புறும் கடப்பாடுடையோம். மேலும் திருமூலர்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச்செய்யு மாறே.

என்று கூறுவதுபோலெல்லாம் பிறமொழிப் புலவர் தம் மொழியைப் போற்றிக் கூறியதாகத் தெரியவில்லை.

— தனிநாயக அடிகளார்

# யா./மயிலிட்டி வடக்கு அ. மி. பாடசாலை

# புதிய கட்டிட நிதி அன்பளிப்புகள்

| | ரூ. ச. |
|---|---|
| திரு. க. வி. துரைசாமி | 7875-00 |
| ஒருவர் | 575-00 |
| திரு. வீ. அன்னலிங்கம் | 300-00 |
| ,, ந. சிவஞானரத்தினம் | 250-00 |
| ,, சி. இராசா | 200-00 |
| ,, பொ. சற்குணநாதன் | 181-50 |
| ,, சி. துரைராசா | 164-50 |
| ஒருவர் | 135-00 |
| திரு. வே. சின்னத்துரை | 134-00 |
| ,, தா. திருநாவுக்கரசு | 100-00 |
| ,, கு. அருணாசலம் | 100-00 |
| ,, சு. அமிர்தசேகரம் | 100-00 |
| ,, இ. இராசதுரை | 100-00 |
| ,, சி. இராசதுரை சகோதரர்கள் | 100-00 |
| ,, சு. வையாபுரி | 80-00 |
| ,, நா. சபாரத்தினம் | 78-00 |
| ,, சி. அப்புத்துரை | 60-00 |
| ,, ப. பாலசிங்கம் | 50-00 |
| ,, சி. செல்லையா | 50-00 |
| ,, து. கடுந்தவம் | 50-00 |
| ,, ப. இரத்தினம் | 50-00 |
| ,, ச. அருணாசலம் | 50-00 |
| ,, அ. குமரகுரு | 50-00 |
| ,, க. பொன்னம்பலம் | 50-00 |
| ,, க. சபாரத்தினம் | 50-00 |
| ,, ஆ. சுப்பிரமணியம் | 50-00 |
| திருமதி தங்கமுத்து சுப்பிரமணியம் | 50-00 |
| திரு. வி. க. இராசையா | 50-00 |
| ,, வ. துரைச்சாமி | 50-00 |
| ,, சு. பொன்னுத்துரை | 50-00 |
| ,, அ. குணபாலசிங்கம் | 50-00 |
| ,, சி. தேவதாஸ் | 50-00 |
| ,, கு. கந்தசாமி | 50-00 |
| ,, இ. மு. பாலசிங்கம் | 50-00 |
| ,, வே. துரைச்சாமி | 50-00 |
| ,, வே. செல்வராசா | 50-00 |
| ,, க. அருணகிரிநாதன் | 50-00 |
| ,, சி. பரமானந்தம் | 50-00 |
| ,, வே. மாணிக்கன் | 50-00 |

| | ரூ. ச. |
|---|---|
| திரு. சி. கருணகடாட்சக்குரு | 50-00 |
| ,, ஆ. குருசாமி | 50-00 |
| ,, ஆ. சிவசுந்தரம் வள்ளத்தினர் | 50-00 |
| ஒருவர் | 50-00 |
| திரு. வ. சின்னத்தம்பி | 45-00 |
| ,, ச. செல்லத்துரை | 30-00 |
| ,, க. சின்னத்துரை | 30-00 |
| ,, மு. வைத்திலிங்கம் | 30-00 |
| ,, கா. மோகனராசா | 25-00 |
| ,, இ. தேசிங்குராசா | 25-00 |
| ,, ச. தருமலிங்கம் | 25-00 |
| ,, ச. இரத்தினசாமி | 25-00 |
| ,, ப. சோமசுந்தரம் | 25-00 |
| ,, பொ. சாம்பசிவம் | 25-00 |
| ,, மு. கந்தசாமி | 25-00 |
| ,, மு. சச்சிதானந்தம் | 25-00 |
| ,, த. வ. சுந்தரலிங்கம் | 25-00 |
| ,, வ. மாணிக்கலிங்கம் | 25-00 |
| ,, வி. ஜெயராட் | 25-00 |
| ,, மு. சிவராசா | 25-00 |
| ,, செ. இரத்தினசிங்கம் | 25-00 |
| ,, செ. சிவதாசன் | 25-00 |
| ,, மு. அருமைநாயகம் | 25-00 |
| ,, க. துரைராசா | 25-00 |
| ,, சி. பொன்னுச்சாமி | 25-00 |
| ,, க. சண்முகநாதன் | 25-00 |
| ,, மு. சுப்பிரமணியம் | 25-00 |
| ,, ம. விக்கினேஸ்வரன் | 25-00 |
| ,, சி. குமாரசாமி | 25-00 |
| ,, வி. இரணசிங்கம் | 25-00 |
| ,, வி. வீரசிங்கம் | 25-00 |
| ,, தம்பு | 25-00 |
| அரியாலை திடீர் நாடக மன்றம் | 25-00 |
| திரு. ச. சச்சிதானந்தஐயர் | 20-00 |
| ,, சு. வேலுப்பிள்ளை | 20-00 |
| ,, வே. சின்னமணி | 20-00 |
| ,, செ. சின்னத்துரை | 20-00 |
| ,, க. சிவகுரு | 20-00 |
| ,, க. கதிரவேலு | 20-00 |

| | ரூ. ச. |
|---|---|
| திரு. ம. திருநீலகண்டன் | 20-00 |
| ,, பி. இராசரத்தினம் | 20-00 |
| ,, அ. சிவபாதசுந்தரம் | 20-00 |
| ,, எஸ். வி. பொன்னுத்துரை | 15-00 |
| ,, இ. த. பரராசசிங்கம் | 15-00 |
| ,, க. தவராசா | 15-00 |
| ,, வே. செல்லத்துரை | 15-00 |
| ,, ச. சுப்பிரமணியம் | 15-00 |
| ,, செ. கா. சிவலிங்கம் | 15-00 |
| ஒருவர் | 15-00 |
| திரு. க. இராசரத்தினம் | 15-00 |
| ,, வ. கந்தப்பிள்ளை | 15-00 |
| ,, சு. தங்கவடிவேலு | 15-00 |
| ,, ப. இரணசிங்கம் | 15-00 |
| ,, சு. சிவகாந்தரூபரத்தினம் | 15-00 |
| ,, வி. தியாகராசா | 15-00 |
| ,, இ. செல்லத்துரை | 15-00 |
| ,, பூ. அப்புத்துரை | 15-00 |
| ,, க. சிதம்பரப்பிள்ளை | 10-00 |
| ,, தா. சிவநாமம் | 10-00 |
| ,, வி. சோமசுந்தரம் | 10-00 |
| ,, வ. பொன்னுத்துரை | 10-00 |
| ,, மு. இரத்தினம் | 10-00 |
| ,, நா. வடிவேஸ்வரன் | 10-00 |
| ,, மு. செல்வராசா | 10-00 |
| ,, சி சத்தியநாதன் | 10-00 |
| ,, சி. செல்லச்சாமி | 10-00 |
| ,, ஆ. லோகேஸ்வரன் | 10-0 ' |
| ,, பொ. அருளானந்தம் | 10-00 |
| ,, மு. செல்வநாயகம் | 10-00 |
| ,, கா. வேலும்மயிலும் | 10-00 |
| செல்வி பா. இராசேஸ்வரி | 10 00 |
| திரு. வி. கருணைகிளி | 10-00 |
| ,, மு. தங்கராசா | 10-00 |
| ,, சு. நாகலிங்கம் | 10-00 |
| செல்வி செ. சித்திரா | 10-00 |
| திரு. சோ. இராசேந்திரம் | 10-00 |
| ,, க. தனபாலசிங்கம் | 10-00 |
| ,, து. வேல்சாமி | 10-00 |
| ,, க. செல்லச்சாமி | 10-00 |
| ,, இ. வேலும்மயிலும் | 10-00 |
| ,, சா. அழகரத்தினம் | 10-00 |
| ,, செ. சடாட்சரம் | 10-00 |
| திரு. பி. சுப்பிரமணியம் | 10-00 |
| ,, வீ. சிவலிங்கம் | 10-00 |
| ,, கா. பிள்ளையாகுட்டி | 10-00 |
| ,, செ. சிவகுரு | 10-00 |
| ,, து. வேலுப்பிள்ளை | 10-00 |
| ,, சீ. சின்னத்தம்பி | 10-00 |
| ,, வே. இராமச்சந்திரன் | 10-00 |

| | ரூ. ச. |
|---|---|
| திரு. ச. சின்னத்துரை | 10-00 |
| ,, சி. சின்னத்துரை | 10-00 |
| ,, மு. சிவசுப்பிரமணியம் | 10-00 |
| ,, சி. மார்க்கண்டு | 10-00 |
| ,, சி. காசிப்பிள்ளை | 10-00 |
| ,, வே. கணபதிப்பிள்ளை | 10-00 |
| ,, சி. கந்தையா | 10-00 |
| ,, ஐ. கந்தையா | 10-00 |
| ,, சீ. மூத்ததம்பி | 10-00 |
| ,, சி. சின்னமணி | 10-00 |
| ,, சி. பசுபதி | 10-00 |
| ,, சீ. துரைச்சாமி | 10-00 |
| ,, ஐ. வயிரமுத்து | 10-00 |
| ,, வ. இராமசாமி | 10-00 |
| ,, சி. வைத்திலிங்கம் | 10-00 |
| ,, வ. வயிரமுத்து | 10-00 |
| ,, சி. முத்துத்தம்பி | 10-00 |
| ,, க. சின்னக்கண்டு | 10-00 |
| ,, வ. சின்னமணி | 10-00 |
| திருமதி வ. செல்லம் | 10-00 |
| திரு. இ. தேசிலிங்கம் | 10-00 |
| ,, வ. பாலகிருஷ்ணசாமி | 10-00 |
| ,, இ. சிவதவநாயகம் | 10-09 |
| ,, கா. ஐயாத்துரை | 10-00 |
| ,, அ. மிக்கேல்பிள்ளை | 10-00 |
| ,, க. கந்தசாமி | 10-00 |
| ,, சோ. தியாகராசா | 10-00 |
| ,, க. முருகுப்பிள்ளை | 10-00 |
| ,, ஐ. இராமசாமி | 10-00 |
| ,, செ. கந்தசாமி | 10-00 |
| ,, K. வாசவன் | 10-00 |
| ,, ச. கந்தசாமி | 10-00 |
| ,, மு. தங்கவேலாயுதம் | 10-00 |
| ,, மு. துரைசாமி | 10-00 |
| ,, ஆ. வே. சிவசாமி | 10-00 |
| ,, கா. நடராசா | 10-00 |
| ,, செ. இராசதுரை | 10-00 |
| ,, கு. வேலும்மயிலும் | 10-00 |
| ,, நி. வேலுப்பிள்ளை | 10-00 |
| ,, இ. செல்லத்துரை | 10-00 |
| ,, வ. நவரத்தினம் | 10-00 |
| ,, சீ. அப்புத்துரை | 10-00 |
| ,, சி. வடிவேலு | 10-00 |
| ,, ஐ. நடராசா | 10-00 |
| ,, க தம்பிராசா | 10-00 |
| ,, வி. வன்னியசிங்கம் | 10-00 |
| ,, வே. வல்லி | 10-00 |
| ,, ஞா. செபப்பிரகாசம் | 10-00 |
| ,, சு. சின்னத்தம்பி | 10-00 |
| ,, வை. இரத்தினம் | 10-00 |

| | ரூ. ச. |
|---|---|
| திரு. த. இராசரத்தினம் | 10-00 |
| ,, நா. கருணானந்தசிவம் | 10-00 |
| திருமதி அ. தம்பையா | 10-00 |
| ,, யோ. இராசரத்தினம் | 10-00 |
| ,, பி. அன்ரனிசாமி | 10-00 |
| ,, சி. சின்னையா | 10-00 |
| ,, செ. பாரதி | 10-00 |
| திரு. மு. சண்முகலிங்கம் | 10-00 |
| ,, நா. பொன்னையா | 8-00 |
| ,, சி. வைத்திலிங்கம் | 5-00 |
| ,, வி. கிருஷ்ணபிள்ளை | 5-00 |
| ,, க. முத்துலிங்கம் | 5-00 |
| ,, வ. சிவசாமி | 5-00 |
| ,, இ. நவமணிஐயர் | 5-00 |
| ,, மு. லோகேஸ்வரன் | 5-00 |
| ,, மு. இலங்கைநாயகம் | 5-00 |
| ,, ஐ. கணேசலிங்கம் | 5-00 |
| ,, சி. அரிஹரிதாசன் | 5-00 |
| திருமதி கு. கனகம்மா | 5-00 |
| திரு. வை. மாணிக்கதேவர் | 5-00 |
| ,, க. தம்பையா | 5-00 |
| ,, வி. கனகசபை | 5-00 |
| ,, மா. செல்வநாயகம் | 5-00 |
| ,, க. மார்க்கண்டு | 5-00 |
| ,, வே. ஆனந்தக்கிளி | 5-00 |
| ,, வ. தம்பிராசா | 5-00 |
| ,, க. ஈஸ்வரம்பிள்ளை | 5-00 |
| ,, வே. கந்தையா | 5-00 |
| ,, வி. நா. இராசரத்தினம் | 5-00 |
| ,, இ. ஜெயக்கொடி | 5-00 |

| | ரூ. ச. |
|---|---|
| திரு. சி. கணபதிப்பிள்ளை | 5-00 |
| ,, பொ. உருத்திராபதி | 5-00 |
| ,, தி. தியாகராசா | 5-00 |
| ,, சா சீனிவாசகம் | 5-00 |
| ,, த. கிளிரூபன் | 5-00 |
| ,, பொ பாலசிங்கம் | 5-00 |
| ,, வீ. சித்திவிநாயகம் | 5-00 |
| ,, கா. சடாட்சரம் | 5-00 |
| ,, சி. குமாரசாமி | 5-00 |
| ,, கா. முருகுப்பிள்ளை | 5-00 |
| ,, சி. கைலாயபிள்ளை | 5-00 |
| ,, ஆ. சிவனடியார் | 5-00 |
| ,, மு. சிவசுப்பிரமணியம் | 5-00 |
| ,, நா. செல்லத்துரை | 5-00 |
| ,, க. செல்வம் | 5-00 |
| ,, இ. இரத்தினசிங்கம் | 5-00 |
| ,, க. தர்மதாசன் | 5-00 |
| ,, சி. இளையதம்பி | 5-00 |
| ,, சி. தவத்துரை | 5-00 |
| ,, சி. கந்தப்பிள்ளை | 5-00 |
| ,, சி. சின்னத்துரை | 5-00 |
| ,, வ. இராசதுரை | 5-00 |
| ,, K. சிவராமன் | 5-00 |
| ,, க. சண்முகநாதன் | 5-00 |
| ,, வெ. வல்லிபுரம் | 5-00 |
| ,, கு. கந்தையா | 5-00 |
| ,, தி. இரத்தினம் | 5-00 |
| ,, இ. சின்னையா | 4-00 |
| ,, ம. கிருஷ்ணபிள்ளை | 2-00 |
| ,, ந. நந்தகோபன் | 1-00 |
| ,, சி. தங்கவேல் | 25-00 |

## யா./மயிலிட்டி அ. மி. பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம்

# புதிய கட்டிட வரவு - செலவுத் தொகுப்பு

| வரவு | ரூ. ச. | செலவு | ரூ. ச. |
|---|---|---|---|
| அன்பளிப்புகள் (மேலேயுள்ள பட்டியற்படி) | 14178-00 | சீமெந்து, மணல், கல் | 4954-00 |
| நாடகவிழா வரவு | 5221-84 | மரம், சொலின்னம் | 4555-05 |
| | | மேசன்கூலி, தச்சுக்கூலி | 7068-85 |
| | | கம்பி, ஆணிவகை | 711-50 |
| | | பூட்டுவகை | 471-40 |
| | | ஓடு, தகரம் | 741-20 |
| | | பொதுச்செலவு | 687-45 |
| | | செலவு நீக்கி மிகுதி | 210-39 |
| | 19399-84 | | 19399-84 |

சி. அப்புத்துரை — தலைவர்
நா. கருணானந்தசிவம் — செயலாளர்
சி. துரைராசா — பொருளாளர்

இக் கணக்குத் தொடர்பான விபரங்கள் அனைத்தையும் பரிசீலனைசெய்து அறிக்கை சரியென உறுதிசெய்கிறோம்.

மு. கந்தசாமி
சி. சிவகுமார்
எண்பார்வையாளர்

### மயிலிட்டி வடக்கு அமெரிக்க மிசன் பாடசாலை

## புதிய கட்டிடத் திறப்பு விழாவிற்கும்

## மலர் வெளியீட்டிற்குமாக

### 1974 - 10 - 20 வரை

# அன்பளிப்பு வழங்கியோர்

| | | ரூ. ச. |
|---|---|---|
| திரு. | ச. தர்மலிங்கம் | 100-00 |
| ,, | வ. தேவானந்தம் | 100-00 |
| ,, | சி. சமரக்கொடி | 100-00 |
| ,, | மு. செல்வநாயகம் | 100-00 |
| ,, | க. க. பொன்னம்பலம் | 100-00 |
| ,, | க. சண்முகம் | 50-00 |
| ,, | ப. பாலசிங்கம் | 50-00 |
| ,, | க. நாகலிங்கம் | 50-00 |
| ,, | இ. வேலும்மயிலும் | 50-00 |
| ,, | சு. அமிர்தசேகரம் | 50-00 |
| ,, | இ. பூபாலசிங்கம் | 50-00 |
| ,, | கா. மோகனராசா | 50-00 |
| ,, | சி. பொன்னுச்சாமி | 50-00 |
| ,, | கா. கைலைநாதன் | 50-00 |
| ,, | மு. சிவானந்தவேல் | 50-00 |
| ,, | இ. சின்னத்துரை | 50-00 |
| ,, | வ. வ. துரைசாமி | 50-00 |
| ,, | சி. யேசுதாசன் | 25-00 |
| ,, | சி. இராசா | 25-00 |
| ,, | வே. துரைசாமி | 25-00 |
| ,, | க. செல்லத்துரை | 25-00 |
| ,, | வீ. செல்லக்கதிரமலை | 25-00 |
| ,, | வீ. வீரசிங்கம் | 25-00 |

| | | ரூ. ச. |
|---|---|---|
| திரு. | பொ. பாலசிங்கம் | 25-00 |
| ,, | வ. பாலகிருஷ்ணர் | 25-00 |
| ,, | த. கிளிரூபன் | 15-00 |
| ,, | ஆ. கருப்பையா | 15-00 |
| ,, | த. பொன்னம்பலம் | 15-00 |
| ,, | க. ஆனந்தசிவம் | 10-00 |
| ,, | அ. முருகுப்பிள்ளை | 10-00 |
| ,, | வி. சிவலிங்கம் | 10-00 |
| ,, | பொ. துரைசிங்கம் | 10-00 |
| ,, | நா. துரைசாமி | 10-00 |
| ,, | சி. அப்புத்துரை | 10-00 |
| ,, | ஞா. செபப்பிரகாசம் | 10-00 |
| ,, | சு. சின்னத்தம்பி | 10-00 |
| ,, | வை. இரத்தினம் | 10-00 |
| ,, | தி. இரத்தினம் | 10-00 |
| ,, | த. இராசரத்தினம் | 10-00 |
| ,, | இ. செல்லத்துரை | 10-00 |
| ,, | நா. கருணானந்தசிவம் | 10-00 |
| ,, | சி. சிவகுமார் | 10-00 |
| திருமதி | அ. தம்பையா | 10-00 |
| ,, | யோ. இராசரத்தினம் | 10-00 |
| ,, | பி. அன்ரனிசாமி | 10-00 |
| ,, | சி. சின்னையா | 10-00 |



கண்ணைக் கவரும்
நவநாகரிக உருவங்களில்
தரமான
தங்க நகைகளுக்கு

நியூ டிசைன் ஜுவலரி
68, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்



பழம் பெருமை வாய்ந்த
மயிலிட்டி வடக்கு
அமெரிக்க மிசன்
கல்வி நிலையம்

உயர் கல்வி நிலையமாக
உயர்ந்தோங்க
வாழ்த்துகிறோம்.

★

க. சிதம்பரப்பிள்ளை
பலசரக்கு வியாபாரம்
மயிலிட்டி
காங்கேசன்துறை



பத்திச் சுவை நனிசொட்டும்
பண்ணிசைக் கச்சேரிகளை

ஆலய விழாக்களிலும்
திருமண வைபவங்களிலும்
ஏற்பாடு செய்யவேண்டுமா?

பண்ணிசைச் செல்வர்
P. A. S. இராசசேகரனின் மாணவரை
நாடுங்கள்

மா. தங்கராசா
திருமுறைப் பண்ணிசைமாணி
உரும்பராய் தெற்கு
உரும்பராய்



அழகுக்கு அழகூட்டும்
தங்க நகைகள்
கண்கவர் டிசைன்களில்
பெற

V

காஜ்ஜியார் ஜுவல்லர்ஸ்
82/6, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

பண்டைப் பெருமை
கொண்டெம் கழகம்
பாரில் உயர்ந்து வாழியவே.

## க. வி. சோமசுந்தரம்

*பலசரக்கு வியாபாரம்*

*வீரமாணிக்கதேவன்துறை*

*மயிலிட்டி*

**காங்கேசன்துறை**

---

மயிலிட்டி வடக்கு
அமெரிக்க மிசன்
வித்தியாலயம்
பல்வகைச் சிறப்பும் பெற்று
உயர்ந்தோங்க
வாழ்த்துகிறோம்.

## சு. வையாபுரி

*உப்பு மில்*

*வீரமாணிக்கதேவன்துறை*

*மயிலிட்டி*

**காங்கேசன்துறை**

---

மயிலிட்டி வடக்கு
அமெரிக்க மிசன் பாடசாலை
*தமிழ் மணம் கமழச் செய்து*
*கலைச் சுவை நுகரச் செய்து*
*மயிலையம் பதியை என்றும்*
*மாண்புறச் செய்க வாழ்க.*

## சீதாலட்சுமி கபே

*வீரமாணிக்கதேவன்துறை*

*மயிலிட்டி*

**காங்கேசன்துறை**

---

மலர் சிறக்க உதவிய
வர்த்தகப் பெருமக்களுக்கு
நன்றி.

★

அவர்களுக்கு ஆதரவு
நல்குவீர்.

—ஆசிரியர்

திருமண விழாக்கள்

பிறந்தநாட் கொண்டாட்டங்கள்

பொது நிகழ்ச்சிகள்

என்பவற்றைப்

புகைப்படம் பிடிக்கவேண்டுமா?



அ. குணபாலசிங்கம்

திருப்பூர்

மயிலிட்டி

காங்கேசன் துறை